DEUS MEUS ET OMNIA
CMSF

# பாதை
PAATHAI
FRANCISCAN MISSIONARY BROTHERS

ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள் (மத் 3:3)

பாதை 3 | ஆவணி - ஐப்பசி - 2006 (நண்பர்களுக்கு மாத்திரம்) | பயணம் 15

# மீண்டும் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை நாட்டின் வரலாற்றில் கடந்த 56 வருடங்களில், இந்நாட்டினை மாறி மாறி ஆட்சி செய்த பிரதான இரு கட்சிகளும், பலதரப்பட்ட தரப்பினருடன், பல்வேறு வகையான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நாட்டின் நலன் கருதி கைச்சாத்து இட்டுள்ளனர். ஆனால் இவையனைத்தும் பல்வேறு, அரசியல், சுய இலாபம், மிதவாத போக்காளர்களின் கடும்போக்கு காரணமாக அவைகள் ஒரு ஒப்பந்தமாகவே காணப்படுகின்றதே தவிர அவற்றின் செயற்பாடுகள் எப்போது நடைமுறைக்கு வரும் என்பதை எவராலும் எதிர்வு கூற முடியாத நிலையில் உள்ளது. இவ்வாறான ஒரு கால கட்டத்தில் நாட்டின் இரு பிரதான கட்சிகளான ஐ.தே.க.யும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும் இணைந்து பிரதான ஆறு அம்சங்களில் இணக்கப்பாடு கண்டு இவற்றை இரண்டு வருடங்களுக்குள் நடைமுறைபடுத்துவதென்ற அடிப்படையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடந்த 24.10.2006ம் திகதி கைச்சாத்திட்டுள்ளனர். இவ் ஒப்பந்தமானது பல புத்திஜீவிகள், மத தலைவர்கள் மற்றும் நாட்டின் நலன்விரும்பிகள் மத்தியில் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. இவ் ஒப்பந்தத்தை நல்ல ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி இரு கட்சிகளும் தாங்கள் இணங்கிக் கொண்டதற்கமைய நாட்டில் புரையோடிப் போய்கிடக்கும், பிரதான பிரச்சினைகளுக்கு வெகு சீக்கிரமே சுமூகமான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க திடசங்கட்பம் கொள்ள வேண்டும். இதற்கு எதிராக சில கடும்போக்காளர்களிடமிருந்து எதிர்ப்புகளும், சவால்களும் எதிர் கொண்டு வரலாம், அவைகள் அனைத்தையும் மன உறுதியுடன் முகங்கொடுக்கவும் நாட்டின் அனைத்து இன, மத, மொழி, மக்களும் அமைதியான சுதந்திரமான ஒரு சூழ்நிலையில் வாழ வழிசெய்ய இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவ வேண்டும் என்பது அனைத்து தரப்பினரதும் அவாவாகும். இதற்குத் தேவையான சக்திகளை இரு தலைவர்களுக்கும் பெற்றுக் கொடுக்க வரம் வேண்டி அனைத்து மக்களும் தத்தம் தெய்வங்களைப் பிரார்த்திப்போம்.

சமாதானத்தின் கருவியாக
இறைவா!
உன் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும்
எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும்
எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும்
எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும்
எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும்
எங்கு துன்பமுள்ளதோ அங்கு இன்பத்தையும்
யான் பரப்பிட அருள் தாரும்.
நான் என் ஆறுதலுக்காக அலைவதை விட்டு
ஆறுதலை கொடுக்க விழைவேனாக
என்னை மற்றோர் புரிந்துகொள்ள வேண்டுமென்று
துடிப்பதை விடுத்து, ஏனையோரைப் புரிந்துகொள்ள யான் விழைவேனாக
என்னை மற்றோர் நேசிக்க வேண்டுமென்று
தவிப்பதை விட்டு
மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக
ஏனெனில்!
கொடுப்பதன் மூலம்தான் பெற்றுக்கொள்ள முடியும்
மன்னிப்பதன் மூலம்தான் மன்னிப்படைய முடியும்
மடிவதன் மூலம்தான் முடிவில்லாத வாழ்விற்குள் பிறக்க முடியும்
ஆமேன்.

புனித பிரான்சிஸ் அசிசியார்

## இன்றைய உலகில் புனித பிரான்சிஸ் அசிசி



நாம் யாவரும் தேடுகின்ற இவ் சமுதா யத்தினில் சமாதானம் உள்ளதா? சமத்துவம் உள்ளதா? அதேபோல் சகோதரத்துவமும் நிறைந்துள்ளதாக இருக்க வேண்டும் என்பதே நாம் யாவரும் தேடுகின்ற சமுதாயம்.

எம் நாடு சண்டைகள், சச்சரவுகள் நிறையப் பெற்று சங்கடங்கள் மேலோங்கி சமுதாயத் தினில் சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து எம் நாட்டை நசுக்கி ஆண்டு கொண்டி ருக்கின்றன.

இவைகளின் மத்தியில் எம் புனிதரான பிரான்சீஸ் பிறந்தால்!...

எப்படியாக வளர்க்கப்படுவார்?.......

இந்நிலை கண்ட அவர் புனிதராக வாழ தீர்மானிப்பாரா? அல்லது போர்புரியும் படை வீரராக வாழ தீர்மானிப்பாரா? எம் புனிதர் வாழ்ந்த அன்பான அந்த அர்ப்பண வாழ்வு இயற்கைகளுடன் மட்டுமாகவா அமைந்தி ருக்கும் அல்லது ஆயுதங்கள் ஏந்துகின்ற ஒவ்வொருவரின் மனித நேயங்களோடாகவா கலந்திருக்கும்?

நாமோ வறுமையின் பெருமை அறியாது வெறுமையினில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மற்றும் தாழ்ச்சியின் சக்தியைப் புரியாது புகழ்ச்சி என்பதனில் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கின்றோம்.

எம் புனிதர் பிரான்சிசின் இத யத்தினில் தன் தலைவன் யார்? என்ற வினாவுக்கு விடை காணும் முகமாக பல மணி நேரங்களாக இயற்கைகளுடன் மாத்திரமின்றி தனது தனிமையிலும் மௌனத் திலும் விடை காண முயன்றார். தனது தலைவன் யார் என்ப தனை உள்ளாய்வு செய்து உள மாற அறிந்து கொண்டார் எம் புனிதர் பிரான்சிஸ்.

இக்கால கட்டத்தினில் அவர் எம் ஒவ்வொருவரையும் அழைக் கின்றார் மௌனத்திலும், தனி மையிலும் மனிதம் எங்கு என் பதை அறிவதற்கு.......

அருட். சகோ. பெற்றிசியா
மாத்தளை.

## அரச அங்கீகாரம் பெற்ற இளைஞர் மறைக்கல்வி

*க.பொ.தா. பரீட்சையின்பின் விடுமுறையில் இருக்கும் மாணவர்களுக்கான அறிய வாய்ப்பு*

க.பொ.த. பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களுக்காக தேசிய மறைக்கல்வி நடு நிலையத்தினால் இவ் வருட ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இளைஞர் மறைக்கல்விக்கான இறுதித் தேர்வு இலங்கை பரீட்சைத் திணைகளத்தினால் நடாத்தப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை மூன்று மொழிகளிலும் நடைபெறும். 2007ம் ஆண்டிலிருந்து அமுழுக்கு வரும் இத்தேர்வு ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் நடாத்தப்படுவதோடு இதில் சித்தி பெறும் மாணவர்களுக்கு இலங்கைப்பரீட்சைத் திணைக்களத்தினால் சிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படும். மேற்படி பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் மூன்று மணித்தியாளங்களாக 2 வினாத் தாள்களுக்கு பரீட்சார்த்தி பதிலளிக்க வேண்டும். 35% புள்ளிகளுக்கு மேல் பெறுவோர் சித்தி பெற்றோராக கணிக்கப படுவர். இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் மறைபாடசாலை வழியாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

மறைப்பாடசாலையில் இளைஞர் மறைக்கல்விக்காக நாம் வெளியிட்டுள்ள பாட அலகுகள் மீள் பரிசோதனை செய்யப்பட்டு பரீட்சைக்கான ஒழுங்குகள் விதிமுறைகள், அறிவுரைகள் அடங்கிய அரச வர்த்தமானி வெளியீடு உரிய காலத்தில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

அருட்சகோதரி ரஞ்சி
தேசிய மறைக்கல்வி நடுநிலையம்
(பொறுப்பாளர் - தமிழ்ப் பிரிவு)

## சேவை பாராட்டு....



முப்பத்தெட்டு வருடங்கள் சிலாப மறை மாவட்டத்தில் ஆயராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெறும் **அதி. வண. பிராங்மாக்கஸ் பர்னாந்து** ஆயர் அவர்களுக்கு பாதை பத்திரிகை குழுவினரின் மனம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். அவரை நாம் வாழ்த்தி எமது பாராட்டுதல்களையும் தெரிவிக்கின்றோம்.

## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா காணும் அருட்பணியாளர்கள்





அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் வின்சன்ற் பற்றிக் (அமதி), அருட்பணியாளர் ஜெரோம் லெம்பேட் (அமதி), யாழ் மறைமாவட்டக் குரு. அருட்பணியாளர் சிறி ஜெயக்குமார் ஆகியோர் தமது குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறார்கள்.
இறைபணியில் இவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் அர்ப்பணத்தோடு பணியாற்ற பாதை தனது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றது.

## சமாதானத்தின் கருவிகளாக அழைப்பு

போரின் கொடூரத்தால் அனைத்து மக்களும் சொல்லொணா துயரத்தில் வாழ்கிறார்கள். சிறுவர் உரிமை, மனித உரிமைகள் பாதிக்கப்படாமல் போரினால் சிக்கிய மக்கள். இந்த அழகிய தேசத்தில் அகதிகளாக் கப்பட்டு வருகிறார்கள்.

ஆயுதத்தால் சாதிக்க முடியாததை ஆன்மீகத்தால் உருவாக்க முடியும் என ஒவ்வொருவரும் சமாதானத்தின் கருவிகளாக அன்பின் வெளிப்பாட்டால் சமாதானத்தைப் பகிர அழைக்கின்றோம்.

சமாதானப் பேச்சுகள் நடைமுறை வெற்றியாக தினமும் தியானத்திலும், அன்புப் பணியிலும், பகிர்விலும், சமய வழிபாட்டிலும் மக்களை ஈடுபட அழைக்கின்றோம்.

இறைவழிபாடுகளில் சகலரும் ஈடுபட திருந்தாதி மணி ஒலிநேரத்தில் குடும்பமாக, தனியாக, இல்லங்கள், ஆலயங்கள், நிறுவனங்களில் முன் நின்று தியானத்தில் ஈடுபட்டு சமாதானத்தின் கருவிகளாக்குங்கள். வழிகாட்டுங்கள். பிரான்சிஸ் அசிசியாரின் செபத்தை கருத்துணர்ந்து செபிக்க அன்புப் பணியில் ஈடுபட்டு சமாதானத்துக்கான இக்காலத்தை இறை உறவிலும் சமூக உறவிலும் வழிபாட்டினை வாழ்வாக்குவோம் என அழைப்பு விடுக்கின்றோம்.

**போர்ச் சூழலின் காரணமாக இம்முறை பாதை சற்றுத் தாமதமாக வெளிவருகிறது என்பதை அறியத் தருகின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்....**

# பாதையின் பார்வையில்....

சமாதானத்தின் தேடல், தேவைகள்
எமது மண்ணில் உணரப்படுகிறது.
உரத்துப் பேசப்படுகிறது.
அவலங்களும், அழிவுகளும்,
குண்டுத்தாக்குதலும், கொலைகளும்,
யுத்த பூமியாக்கி இரத்த ஆறு பாயும்
மண்ணில் இருந்து,
குற்றுயிராக வார்த்தைகளற்று
முணங்கிக் கொண்டிருக்கும்
பிறந்த குழந்தை முதல் இளையோர்,
முதியோர் பட்டினியில் இறக்கும்
தருவாயில், 'சமாதானம் செய்வோர்
பேறு பெற்றோர்' என்ற
வார்த்தைகளை வாழ்வாக்கிய
புனித பிரான்சீஸ் அசீசியின்
வழிகாட்டல் வாழ்வாக வேண்டும்.
சமாதானம் பேசுவோர் அல்ல
சமாதானம் செய்வோராக பலரும்
செயல்படுவதே இன்றைய தேவை.
பழங்கள் பழுக்கும் காலத்தில்
வாழ்வோடு இணைந்தவை.
'எங்கு பகை உள்ளதோ
அங்கு அன்பையும்,
எங்கு மனவருத்தமுள்ளதோ
அங்கு நம்பிக்கையையும்,
எங்கு இருள் உள்ளதோ
அங்கு ஒளியையும்,
எங்கு துன்பமுள்ளதோ
அங்கு இன்பத்தையும்,
யான் பரப்பிட அருள் தாரும்'.
என்ற வரிகளை உச்சரிப்பதோடு
இல்லாது செயல்படுவோராக
வாழ அழைப்பு விடப்படுகிறது.
இவ்வார்த்தை வாழ்ந்து
வழிகாட்டியவர்
மனிதரில் புனிதராக
போற்றப்படுகிறார்.
'நண்பர்களோடு அல்ல
பகைவரோடுதான்
சமாதானத்தை பகிருங்கள்' என
தவறுகளை தவிர்க்க முனையுங்கள்.
சிறிய செயல்கள் ஒவ்வொன்றும்
பெரிய சம்பவங்களின் வித்துக்களே.
புன்னகை, முரண்பாடற்ற
தொடர்பாடல், ஆன்மீகதேடல்,
அன்புப்பணிகள் என்பவற்றால்
இன்றைய பொழுது பிறருக்கு
சமாதானத்தை வெளிப்படுத்தி
செயல்படுத்தலாம் என்பதை
இனங்கண்டு பாருங்கள்.
செயல்கள் ஒவ்வொன்றும்
புனிதர் பாதையில் செல்லும்
தடங்களே. அசீசியின் வாழ்வில்
கற்க பலநூறு படிப்பினைகள்
உண்டு. இயற்கையுடன் கொண்ட
உறவுக்கு எமது நாட்டில்
வீட்டில் பசுமையை காப்பது
மட்டுமல்ல பசியை வறுமையை
போக்கும் வல்லமையும்
உண்டல்லவா?
மன அமைதிக்கு இதமான இயற்கை
வளங்களில் எமது பங்களிப்பு
எவையாகும்.
உங்கள் முயற்சியால்
நாட்டில் பயன்தரும் மரங்கள்,

## சமாதானத்தின் பங்காளரா நீங்கள் ?

மரங்களில் குவியும் வெளவால்கள்
போல், சமாதான காலத்தில்
சுற்றுவாக்குகள், கோரிக்கைகள்,
கருத்தரங்குகள், ஒன்று கூடல்கள்,
களியாட்டங்கள் நடத்தியவர்கள்
எங்கே சென்றனர்?
அவலக் குரலில் ஆறுதல் சொல்ல
அன்புக்கரம் நீட்ட
குரல் கொடுக்க நாதியற்றோராக
வாழ்ந்து மௌனித்திருப்போராலும்,
சமாதானம் வார்த்தை வடிவில்
பேசித்திரிவோராலும் அமைதி
அஸ்தமனமாகி செல்வதை
உணர்ந்து, சமாதானத்திற்காய்
உழைத்து செயல்படுவோரே
பேறுபெற்றோர் ஆவார்.

அண்ணல் அசீசியின் வேண்டுதல்
வார்த்தையோடு மட்டுமல்ல
தென் ஆபிரிக்க தலைவர் நெல்சன்
மண்டேலா வாழ்ந்து காட்டினார்.
சமாதானத்தின் வெளிப்பாடு உன்
புன்னகையில் இருந்து
ஆரம்பமாகட்டும்.
மனங்கள் இறுகிய நிலையில்
மகிழ்ச்சியை எப்படி பகிரலாம்.
கூடி இருப்போருடன் பகிர முடியுமா
சமாதானத்தை எப்படி
துயருறுவோரிடம்
பகிரலாம். உங்கள் செயல்கள்
தினமும்
மற்றவர்கள் ஆறுதலுக்காக,
அமைதிக்காக, சமாதானத்துக்காக
அர்ப்பணிக்கும்
பொழுதுகளாகட்டும். இதற்கு
தடையானவற்றை களைந்து
கொள்ள
தடைகளை இனம் காணுங்கள்.
தோட்டங்கள் பிறரின் பஞ்சம், பசி போக்க
உதவியதா? ஒவ்வொருவரும் செயல்பட
தூண்டுவதில் செயலால்
நல்லதை விதைத்து நல்லதை அறுவடை
செய்தலே
அசிசி காட்டிய பாதையாகும்.
அன்புபாதை, அகிம்சைபாதை,
அர்ப்பணிப்பானபாதை, ஆன்மீக பாதையை
செப்பனிட்டு செயல்படுவோரால்
சமாதானத்தின் கருவிகள் பெருக எமது
நாட்டிலும், வீட்டிலும் சமாதானத்தின்
பாதையை செப்பனிட பாதை மாறிப்போகா
பயணம் தொடர
வாழ்த்துக்கள்.

**பாதையில் வெளிவரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்புடையோர்.**

# வெற்றிக்கு வித்திடும் கட்டுப்பாடுகள்

இன்று எம் சமுதாயத்தில் முக்கியமாக இளைஞர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு வார்த்தை கட்டுப்பாடு. குடும்பம், பாடசாலை, சமய நிர்வாகம் போன்ற சமுதாய நிறுவனங்கள் மற்றும் சமுதாய கட்டுப்பாடுளை இன்றைய இளைய தலைமுறை சகித்துக்கொள்ள முடியாமல் உள்ளது. அதற்கு அவர்கள் கூறும் பதில் "நாங்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்".

ஆனால் இந்த கட்டுப்பாடுகள் ஓர் அன்பின் செயல் என்பதையும் அது வெற்றியின் பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும் சக்தியை கொண்டுள்ளது என்ற உண்மையையும் உணரும் பொழுது உண்மையான சுதந்திரம் எது என்பது எமக்கு புலனாகும்.

கட்டுப்பாடு என்பது ஒரு குழந்தையை சாட்டையால் அடிப்பது அல்ல மாறாக அன்போடு கூடிய ஓர் உறுதிப்பாடு. உண்மையான கட்டுப்பாடு என்பது ஓர் அன்பின் செயற்பாடு. ஆனால் சில சமயங்களில் அன்பாக இருப்பதற்கு அன்பில்லாமல் இருக்க வேண்டும். உதாரணமாக, பாலைவனத்தில் வாழும் ஒட்டகம் என்ற உயரமான விலங்கு குட்டிப் போட்டவுடன் குட்டி தானாக எழுந்து நிற்கும் மட்டும் எட்டி உதைத்துக் கொண்டே இருக்கும். இல்லையென்றால் அதை மற்ற காட்டுப்பூனைகள் தின்று விடும். இது ஓர் அன்பின் செயலா? ஆம், எல்லா மருந்துகளும் இனிப்பானவைகள் அல்ல. எனவே கட்டுப்பாடு என்பதை சுதந்திரத்தை மறுக்கும் செயலாக பார்க்காமல் உண்மையான சுதந்திரத்தை அளிக்கும் செயலாக பார்க்கப் பழகவேண்டும். குழந்தைக்கு இனிப்பு பிடிக்கும் என்பதற்காக பெட்டி நிறைய இனிப்பு கொடுப்பது சுதந்திரம் அல்ல. மாறாக ஒரு நாளைக்கு ஒவ்வொன்றாகக் கொடுப்பது சுதந்திரம்.

புகையிரத வண்டியை அதனுடைய பாதையிலிருந்து விலக்கி விட்டால் அதுவும் சுதந்திரம்தான். ஆனால் அதன் விளைவுகள்? ஒவ்வொருவரும் தங்களுக்குத்தானே சொந்த சாலை விதிகளை வைத்துக்கொண்டு கண்டபடி வாகனத்தை ஓட்டினால் அதைச் சுதந்திரம் என்பீர்களா? குழப்பம் என்பீர்களா? இங்கே இல்லாதது கட்டுப்பாடு. ஆனால் சாலை விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்கும் போது நாம் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றோம்.

எட்கர் ஹோஸ் என்ற அறிஞரின் கருத்துப்படி ஒவ்வொரு குடும்பத்திலும் கட்டுப்பாட்டைப் பழக்கினால், இளங்குற்றவாளிகள் 95% குறைக்கலாம் என்கிறார். எனவே எங்களுக்கு கொடுக்கப்படும் கட்டுப்பாடுகள் அல்லது நாங்கள் கடைப்பிடிக்கும் கட்டுப்பாடுகள் வாழ்வில் வெற்றிபெற நம்மை கொண்டு செல்கின்றது. வாழ்வில் வெற்றி பெறுவதென்பது நாம் எதை செய்ய விரும்புகிறோமோ அதற்கு பலியாகிவிடாமல் நாம் எதை செய்ய வேண்டுமோ அதை செய்யும்போது ஏற்படுவது இதற்கு கட்டுப்பாடு அவசியம்.

அருட்சகோ அருளப்பு மில்.'.பர் வாஸ் *CMF*

# போரும் ஆலயங்களும்

எதிர்பார்த்தும் பாரததுமாக பல்குழல் குண்டுகளின் சத்தம் வானைப் பிழந்து நீர் நிலைகள் சிதற (6.45 மாலை) 11.08.2006. யாழ் குடாநாட்டின் அமைதி சிதறடிக்கப்பட்டது. வடக்கிலும் போர் ஆரம்பமாகியது. யாழ்ப்பாண நகரின் கரையோரப் பகுதிகள் பீதிபடர அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகள், கோவில்களில் அகதிகளாகினர். உணவு, நீர், மின்சாரம் துண்டிப்பு அவலநிலையை அதிகரித்தது.

ஆனால் உண்மையான அழிவு அல்லைப்பிட்டியிலேயே நிகழ்ந்தது. அங்கு புனித பிலிப்பு நேரியர் கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீது பல்குழல் எரிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் பத்து பேர் கொல்லப்பட்டனர். பங்குக் குரு ஜிம் பிரவுண் இறை இரக்கத்தினால் காப்பாற்றப்பட்டார். கோவில் நிர்மூலமாக்கப்பட்டது. கடற்கரை ஓரத்தில் இருந்த புனித அந்தோனியார் சிற்றாலயத்தருகே யோன்றொபட், மேரி மக்றில்டா உட்பட பத்திற்கு அதிகமானோர் புதைபடாமலும், அறைகுறை உயிரோடும் கிடந்தனர். உதவிகிட்டவில்லை. மரித்தோர் தொகை 20. காயம் பட்டோர் 65 பேர். 30 மோசமான காயப்பட்டோர். நீதிபதி சிறிநிதி நந்தசேகரனின் துணிவு முயற்சி யாழ் வைத்தியசாலைக்கு அவர்களைக் கொணர்ந்து சேர்த்தது. அல்லைப்பிட்டிப் பகுதியின் 695 குடும்பங்கள் 2850 ஆட்களுடன் ஊர்காவற்துறை புனித மரியாள் ஆலயத்திலும், யாழ் அடைக்கலநாயகி ஆலய வளாகத்திலும் அமர்த்தப்பட்டனர். மண்டைத்தீவு குடும்பங்கள் பிள்ளையார் ஆலயத்திலும் வைக்கப்பட்டனர். சாட்டி உட்பட வேலணைப் பகுதிகளில் 982 குடும்பங்கள் 3786 ஆட்களுடன் இடம் பெயர்ந்தனர்.

யாழ்ப்பாண நகர்ப்புறம் சண்டைகள் நடைபெறாவிடினும் மரணபீதியால் 5949 குடும்பங்கள் 24862 பேர் இடம்பெயர்ந்து புனித பத்திரிசியார் பாடசாலை, புனித யேம்ஸ் பாடசாலை, அடைக்கல நாயகி வளாகம் முதலியவற்றில் தங்கியுள்ளனர்.

இன்னொரு புறம் தென்மராட்சி அடிபாடுகளில் 8727 ஆட்கள் 2450 குடும்பங்கள் இடம்பெயர்ந்து மிருசுவில் வடக்கு, கரவெட்டி முதலாம் 8 இடங்களிலும், தனியார் வீடுகளிலும் இருக்கின்றனர். 20க்கு அதிகமான மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஒட்டு மொத்தமாக 41832 மக்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும், 41000 மக்கள் வேறு வீடுகளிலும் வயல்களிலும், மரநிழல்களிலும் தங்கியுள்ளனர்.

500,000 மக்கள் குடா நாட்டிற்குள் அகப்பட்டுள்ளனர். கடல், வான் தரை வழிகள் துண்டிக்கப்பட்டு நாவற்குழி உணவுக் களஞ்சியத்தில் உள்ள 500 தொன் அரிசி, சீனி, பருப்பு முதலியவற்றுடன் வாழவேண்டிய நிலையில், நல்ல வேளை யாக உள்ளூர் உற்பத்தி மரக்கறிகள் சந்தைக்கு வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் *A*9, மூடப்பட்டு சகல போக்குவரத்தும் ஸ்தம்பிக்கப்பட்ட நிலையிலும், கடற்தொழில், விவசாய நெல்வயல் காணிகள் விளைச்சல் இன்றியும் இருப்பதால் நாளைய நிலை பூச்சியமான பட்டினிநிலைக்கு வரும். 15 *NGO*கள் வெளியேறுகின்றன. அவர்களின் சுனாமி திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில் *ICRC,UNHCR* மட்டுமே மிஞ்சும்.

இத்துன்பங்களின் காலம் சுத்திகரிப்பின் நேரம். போர் ஓய்ந்த காலத்தில் மக்களின் நடத்தை தீர்ப்பிடுகிறது. எசெக்கியல் 7, 3-ல் சொல்கிறபடி "உன் நடத்தைக்கு ஏற்றபடி உனக்கு தீர்ப்பிடுவேன், வெறுப்புக்குரிய உன் எல்லாச் செயல்களுக்கும் தக்க பதிலடி கொடுப்பேன்...... தம் குற்றங்களுக்காகப் பள்ளத்தாக்குப் புறாக்களைப் போலப் புலம்புவர். (16) கடுந்துயர் அடையும் பொழுது அமைதியை நாடுவர்." 25...... அப்பொழுது நானே ஆண்டவரென அவர்கள் அறிந்துகொள்வர்" 27.இறைவனே எல்லாம். போர் செய்யும் வல்லமைகள் ஒன்று இரண்டல்ல, பல. ஒரு தொகையை எண்ணிவிடலாம் போல, ஓர் பக்கத்தில் நேரடிப்போர், மறு பக்கத்தில் இரகசிய கொலைகள், பட்டினிச்சாவு, மருந்து தட்டுப்பாடு வைத்திய தாதியர் பற்றாக்குறை, நோய் கணிப்பு பரிசோதனைகள் செய்யப்படமுடியாத நிலை, பல நோய்கள் பெருக இவற்றினிடையே பெருகிவரும் இயற்கைச் சாவுகள் மாற்கு 13, 17 நினைவூட்டுகின்றன. அந்நாளில் கருவுற்றிருப்போர், பாலூட்டுவோர் ஆகியோர் நிலைமை அந்தோ பரிதாபம்.... இவை துன்பம் தரும் நாள்களாய் இருக்கும்..... ஆண்டவர் அந்நாள்களைக் குறைக்காவிடில் எவரும் தப்பிப் பிழைக்க முடியாது". 20.

இன்றும் அன்றும் உண்மை மனமாற்றம் இன்றி, ஆண்டவரே சமாதானத்தை தாரும் என்று அதிக செபங்களைச் செய்கின்றனர், ஆனால் வெறும் குளறல்கள், பாடல்கள் செபம் ஆகா, குறிப்பாக "நடுங்கவைக்கும் தீட்டு நிற்கக்கூடாத இடத்தில் நிற்பதை நீங்கள் காண்பீர்கள். படிப்பவர் இதை புரிந்துகொள்ளட்டும்" 13, 14 மாற்கு. இன்றைய வழிபாடுகள், மறை உண்மை செய்பவர்கள், தூயவரான இறைவனின் பரிசுத்தத்தினால் சுட்டெரிக்கப்பட்டவர்களாக இருக்காமல், வெறும் நாடக நடனக்காரராக இருந்தால் அவர்கள் செபம் கேட்கப்படாது. மாறாக அவர்கள் ஆலயத்தை தீட்டுப்படுத்தி திருச்சபையை அழிப்பவர்களாகுவர். "மானிட மகன் கதவை நெருங்கி வந்துவிட்டார்" என்பதை அறியமாட்டார்.

ஈழப்போரின் அழிந்த கத்தோலிக்க ஆலயங்களின் பட்டியலைப் போட்டுப்பாருங்கள். நவாலி புனித பேதுரு ஆலயம், (சூழல்) யாகப்பர் ஆலயம் குருநகர், பிலிப்பு நேரியார் அல்லைப்பிட்டி, யூதாததேயு அரியாலை, புனித பேதுரு முல்லைத்தீவு, வேறுபல சிறிய பெரிய ஆலயங்கள் ஏன் யெருசலேமின் ஆலயம் போன்று அழித்தொழிக்கப்படவில்லையா? 20.08.06 இல் அல்லைப்பிட்டியில் ஜிம் பிரவுண் அடிகள் விமலதாஸ் என்பவருடன் காணாமல் போகவில்லையா?

நம் ஆலயங்கள் இன்று அழிவுற்றால், திருச்சபையும் அதன் மக்களும் உண்மையாய் வழிபடுவோராய் மாறி, "தந்தையே அவரது உண்மை இயல்புக்கேற்ப (யோவான் 4, 23) உள்ளத்தில் தான் வழிபடவேண்டும்".

உண்மையோடு கூடிய சமாதானத்தை தேடுவோம். இறை உண்மையையும் மனித உண்மையையும் சபை திரும்பவும் தேடுமா? சமாதானத்தை பெற அதைத் தேடத் துணியுமா?

நன்றி: தேவதாயின் குரல்



குருக்கள் மடம் அசிசி முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதனை முன்நின்று நடத்திய அதன் போஷகர் அருட். சகோ. செல்வநாயகம் அவர்களையும், அதன் ஆசிரியை மற்றும், மாணவர்களையும் படத்தில் காண்கிறீர்கள்.



டொன் பொஸ்கோ சிறுவர் இல்லம், மக்கோணாவில் அவ் இல்லத்திற்கான புதிய உணவு அறையும், நூல் நிலையம் ஒன்றும் அண்மையில் அருட். சகோதரர்களின் மாகாணத் தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை துறவறசபைத் தலைவர்களின் சங்கத்தின் கூட்டறிக்கை.....

துறவற தலைவர்கள் குழுவின் சார்பாக ஆறு அங்கத்தவர்கள் கொண்ட பிரதிநிதிக்குழு மன்னார் நோக்கியும், மூன்று அங்கத்தவர்கள் கொண்ட பிரதிநிதிக்குழு யாழ்ப்பாணம் நோக்கியும் பயணம் செய்தனர். மூன்று முக்கிய குறிக்கோள்கள் இவர்களின் மனதில் இருந்தன. முதலாவதாக வடக்கில் வாழும் தம் சக சகோதரர்களுடனும் மக்களுடனும் தங்கள் ஐக்கியத்தை தெரிவிப்பதற்கும், இரண்டாவதாக, நேரடியாக தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் வாழும் மக்களைக் கண்டு உரையாடி தொடர்பு சாதனங்களில் கொடுக்கப்படும் செய்திகளுக்கு மேலாக உண்மையை அறிந்து கொள்வதற்கும், மூன்றாவதாக மக்களினது அவலக் குரலிற்குச் செவி கொடுத்து அவர்களுக்குச் சார்பாக குரலெழுப்பு வதற்கும் ஆகும்.

எங்களுடைய வேண்டுகோளிற்கு இணங்க தேசிய திருச்சபை சங்கத்தின் பிரதிநிதிக் குழுவிற்கு தலைமை தாங்கிய அதி. வண.

## நாம் கண்டவை

துலிப் சிக்கேராவினால் பொதுமக்களுடன் கலந்துரையாட ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் பங்குபெறும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. பேசாலை ஆலயத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மன்னார் பிரஜைக்குழு, அரசாங்க அதிபர், அரச அதிகாரிகள், பிள்ளைகள், மீனவர்கள், பெண்கள் ஆகியோருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்தது.

காட்டாஸ்பத்திரியில் நடந்த நான்கு மீனவர்களின் கொலையைப் பற்றி அறிந்து, பேசாலையில் தாக்கப்பட்ட வெற்றி மாதாவின் ஆலயத்தைக் கண்டு, அழிவுற்றுக் காணப்பட்ட மக்களின் உடமை களான மீன்பிடிப் படகுகள், இயந்திரங்கள், வாடிகள் போன்றவற்றை நேரில் பார்த்ததோடு, ஆலயத்தில் தஞ்சம் புகுந்த மக்களை கண்டவுடன் எம் உள்ளங்கள் திடுக்கிட்டன. கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட தாக்குதலே இம் மக்களை இங்கு அகதிகளாக்கியுள்ளது. அத்தோடு மன்னாரில் காவற்படை யினரால் துன்பத்திற்குள்ளாக்கப்பட்ட அருட்சகோதரர்களின் அனுபவத்திற்குச் செவி சாய்த்தோம். காவற்படையினரின் சிற்சில செயல்களை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். காவற்படையினர் மதத்தலைவர்களையும், மத ஸ்தலங்களையும் அவமதித்து நடந்தது கவலைக்குரிய விடயமாகும்.

23.12.2005 தினத்தன்று நடைபெற்ற குழந்தை, தாய் இரு வயோதிபர் ஆகியோரின் கொலைகளின் காரணமாக 100 இல்லங்களைக் கொண்ட வீடமைப்புத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டோம். வங்காலையில் நான்கு பேர் (தந்தை, தாய், மகன் மகள்) கொண்ட குடும்பமொன்று கொடூரமான நிலையில் கொல்லப்பட்ட செய்தியை அயலவர்களும், உறவினர்களும் விபரித்துச் சொல்வதைக் கேட்க எம் மூச்சுத் திணறியது. மக்களுக்கு பாதுகாப்பை வழங்க கிராமத்தைச் சுற்றி இராணுவப் படையினர் இருக்கும்போது, அவர்களுக்குத் தெரியாமல் இவ்விதமான கொலை நடப்பது வியப்புக்குரியது மரண விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கடந்த அனுபவங்களுடன் நோக்கும்போது, விசாரணைக்கு எடுத்த சம்பவங்கள் தலைமறைவானதுபோல இச்சம்பவமும் தலைமறைவாகிவிடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளது.

தோட்டவெளியிலும், பள்ளி முனையிலும் உள்ள ஜோசப்வாஸ் நகரில் வாழும் பல மக்களை நாம் சந்தித்தோம். இவ்விடமானது மன்னார் ஆயருக்கு சொந்தமானது. இங்கு வாழும் மக்கள் விடத்தல் தீவை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். 1999ல் இராணுவத்திற்கும் புலிப்படையினருக்கும் இடையில் நடந்த தாக்குதல்களின்போது பாதுகாப்புத் தேடி இம்மக்கள் இங்கு வந்து குடியேறினார்கள். மீன்பிடித்தல் தடை விதிக்கப்பட்டபோது, கடந்த ஒரு மாத காலமாக மாபெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர். ஒரு சிலர் ஆங்காங்கு ஏற்படுத்துகின்ற அசம்பாவித செயல்களுக்கு இம்மீனவர்கள்தாம் மொத்தமாகத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம் என்பது இவர்களின் உணர்வாகும் குற்றம் புரிந்தோர்மீது எவ்வித விசாரணையோ, நீதித்தீர்ப்போ வழங்காததினால் தாங்கள் துன்பப்பட வேண்டியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். கடலை மட்டும் நம்பி வாழும் இம் மீனவர்களுக்கு மட்டும் மீன்பிடிக்கத் தடைவிதிக்கப்படும்போது, இந்திய மீனவர்களின் ட்ரோலர் சர்வதேச சட்டத்தைமீறி இலங்கைக் கடலில் மீன் பிடிப்பதைக் காண இவர்களின் மனதில் விரக்தி ஏற்பட்டுள்ளது. இந்நிலைகள் பிள்ளைக ளினதும், இளைஞர்களினதும் எதிர் காலத்தைப் பாதிப்பதை நினைக்க எம் மனங்கள் வேதனைக்குள்ளாயின.

முப்படையினரும் மும்முரமாக மன்னாரில் சேவையில் ஈடுபட்டுள்ளனர்

## கேட்டவை

என்பது தெட்டத்தெளிவான விடயம். மதவாச்சியிலிருந்து மன்னார்வரை செல்லும் வழியில் இருபக்கங்களிலும் காணப்படும் புதிய பதுங்குகுழிகளின் தோற்றம் வழிப்போக்கர் மனதில் பயத்தை ஏற்படுத்துகின்றது. கிராமங்களுக்கு அண்மையிலோ அல்லது பாடசாலை வைத்தியசாலை போன்ற பொது இடங்களுக்கருகில் இராணுவப்படையினர் முகாம்கள் அமைக்கப்படுவது பொதுமக்கள் மனதில் பயத்தை ஏற்படுத்துகின்றது. எனவே அவ்வாறான இடங்களில் வாழும் மக்கள் கிராமத்தை விட்டுக் காட்டில் வாழ்கின்றனர். முருங்கனில் சிறுகண்டல் எனும் கிராம மக்கள் காட்டில் வாழ்வதைக் கண்டு எம் மனங்கள் வேதனைப்பட்டன. மீட்கப்பட்ட பிரதேசத்தில் மனித இனங்களிலும் பார்க்க, காட்டுப் பிரதேசத்தில் மிருகங்களுடன் வாழ்வது கஷ்டமல்ல என்ற கருத்தை எம்முடன் பகிர்ந்துகொண்டனர்.

குருக்களுடனும் துறவிகளுடனும் நடாத்திய கலந்துரையாடலில் மன்னார் நாளுக்கு நாள் சீரழிந்து செல்வதைக் காண அவர்கள் மனங்கள் வேதனைப்படுகின்றன எனவும், அதிகரித்துச் செல்லும் அசம்பாவிதங்கள் தமது மனதை குழப்புகின்றதெனவும் தங்கள் உணர்வுகளை பகிர்ந்துகொண்டனர். இராணுவப் படையினரின் கொடூர ஆளுமையை முன்னிட்டு, யாரைப் பாதுகாக்க இராணுவப்படை மன்னாரில் வைக்கப்பட்டுள்ளதென்ற கேள்வியை வினவினர். பேசாலை ஆலயத்தைத் தாக்கிய சம்பவத்தையும் அருட்சகோதரர்கள் இல்லம் சென்று தகாத முறையில் செயற்பட்ட சம்பவத்தையும் கடுமையாக எதிர்த்தனர் மேலும் வழிபாட்டு ஸ்தலங்களும் ஆபத்தை எதிர்நோக்குகின்றன என வேதனையுடன் தெரிவித்தனர்.

பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுடன் உரையாடும்போது, படையினர் மத்தியில் சமாதானத்திற்கும் அதை நிலைநாட்டுவதற்கும் தங்களை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ள வீரர்களின் ஆர்வத்தையும் பார்த்தபோது எம் மனதில் ஒருவித மகிழ்ச்சி தோன்றியது. இவ்வாறான வீரர்களை நிச்சயம் நாம் பாராட்டவேண்டும். இராணுவங்கள் நாளாந்தம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை நாம் கண்டுணரக் கூடியதாக இருந்தது. அவர்களுக்காக அனுதாபப்படுவதோடு தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து மக்களை பாதுகாக்க முயலும் வீரர்களினது துணிவை நாம் பாராட்டுகின்றோம். தம் எதிரிகளுடன் போராடவும், எதிர்பாரா சம்பவங்களுக்கும் முகங்கொடுக்கவும் போதியளவு ஆயுதங்கள் இராணுவப் படையினருக்கு வழங்கப் பட்டுள்ளதா என்ற சந்தேகம் எம் மனதில் எழுந்தது. ஒழுக்கநெறி தொடர்பான அறிவு, சில அதிகாரிகள் மட்டில் காணக் கிடைக்க வில்லை என்பதை கவலையுடன் குறிப்பிட விரும்புகின்றோம். இது தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் உரையாடினோம். மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர்.

ஜுலை மாதம் 2ம் திகதி தொடக்கம் 5ம் திகதி வரை யாழ்ப்பாணம் சென்ற மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட எம் பிரதிநிதிக்குழு தங்கள் அனுபவங்களைப் பகிரும்போது பின்வருமாறு கூறினார்கள். தாங்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் வழியில் ஓமந்தையில் இராணுவப் படையினரால், இருவர் தங்கள் சுய விருப்பத்தில் இப்பயணத்தை மேற்கொள்கிறோம் என எழுதிக் கையொப்பமிட்டு தரும்படி கேட்கப்பட்டிருந்தனர். மற்றையவர் தமிழர் என்றதினால் அவரிடம் அவ்வாறான கடிதம் கேட்கப்படவில்லை. இராணுவத்தின் இச்செயல் இலங்கைப் பிரஜைகள் இருவித சட்டத்தினால் நடாத்தப்படுவது தாங்கமுடியாத வேதனையைக் கொடுத்ததாகக் கூறினார். மீட்கப்பட்ட பிரதேசம் என்ற பகுதியை அடைந்ததும் அவ்விடங்கள் இராணுவப் படையினரால் பலப்படுத்தப்பட்டுள்ளதை அவர்கள் உணர்ந்ததாகக் கூறினர்.

## உணர்பவை

யாழ்ப்பாணத்தில் அமலமரித்தியாகிகள் சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் இயக்குனரைச் சந்தித்தபோது, அந்நிலையமானது மனித உரிமைகளுக்கு எதிரான செயல்களுக்கு மாறான ஆலோசனைகளை வழங்குவதில் ஈடுபடுகின்றது என்பதைத் தெரிவித்தார். இப்பணியகத்தில் சேவையாற்றுவோர் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் 3/4 பங்கு இராணுவப்படையினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருப்பதால் மக்கள் தங்களது சொந்த கிராமங்களுக்குச் செல்ல முடியாமையை வேதனையுடன் கூறியதாக அறிவித்தனர். பயிர் நடுகைக்கும் விவசாயத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதால் மேலும் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தனர். மக்கள் மனதில் உருவாக்கப்பட்டுள்ள அச்சத்தைப் பற்றியும் கலந்துரையாடினர். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சிங்கள தமிழ் இளைஞர்களின் ஒன்று கூடல்கள் பெரிதும் பாராட்டத்தக்கவை என்றும் அவ்வாறான செயற்திட்டங்கள் இனங்களுக்கிடையில் ஒற்றுமையைப் பேண உதவும் எனவும் தெரிவித்தனர். இராணுவத்தினாலும், விடுதலைப்புலிகளினாலும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சத்தை முழுமையாக எதிர்ப்பதாகவும், தொடர்ந்தும் சமாதானத்திற்கே இப்பணியகம் செயற்படும் என்பதையும் உறுதிப்படுத்தினர்.

தொடர்ச்சி பக்கம் – 06

# அன்பு

அன்பு இருப்பவனிடம் துன்பம் நெருங்காது. நீ மற்றவர்களுக்கு ஆற்றுகின்ற உதவியை விட நீ காட்டுகின்ற அன்பே சிறந்தது. அன்பு உள்ளவர்கள் எப்போதும் தனக்கு தான் என எதையும் விரும்புவது கிடையாது. அப்படி விரும்பினால் அது பிறருக்கே தான் இருக்கும் ஆணவம் பிறக்கிறது அன்பு குறையுமிடத்தில் குற்றங்கள் வளரத்தொடங்குகின்றன. உலகில் மிகவும் மலிவாக கிடைப்பது அன்பு வாங்குபவருக்கும் இலாபம், கொடுப்பவருக்கும் இலாபம். அன்பிற்கு ஸ்தாபனம் அன்னை, அறிவிற்கு ஸ்தாபனம். ஆசான், தாயின் மொழி அன்பு மொழியாகும். அன்பு இல்லா இடம் காட்டு மிருகங்கள் இருக்கும் குகை. அன்பு இருந்தால் யாருக்கும் சுமையாக மாட்டார்கள். அன்பினால் எதையும் துணிவுடன் பெறலாம். அன்பான செயல் மருந்தாகவும், வாழ்த்தாகவும் இருக்கிறது! அன்பு ஒன்றினாலே பகைமையை விலக்க முடியும். அன்பினால் அவனியையும் ஆட்சி செய்ய முடியும்.

*தொகுப்பு: S. கிருபாகரன்*
*புனித பிரான்சிஸ்கன் சிறுவர் இல்லம், மாத்தளை.*

**நண்பர்களுக்கும் உபகாரிகளுக்குமான 'பாதை'**

| | |
|---|---|
| *Editor,<br>PAA THAI,<br>franciscan Br others,<br>Assesi Nivasa,<br>Thudarikulam Road,<br>Cheddikulam,<br>Sri Lanka.<br>Te : 0602241781* | *Editor,<br>PAA THAI<br>franciscan Br others,<br>Canal Road,<br>Wattakaliya, Chilaw ,<br>Sri Lanka.<br>Tel : 032 - 2223635* |

*E.mail : pathaicmsf@yahoo.com*

உங்கள் அன்பளிப்புகள், உதவிகள்
பாதை பத்திரிகை வளர்ச்சிக்கு
பயன்படுத்த உதவும்.
தனிப்பிரதி : 5.00 ரூபா
ஆண்டு சந்தா: 60.00 ரூபா
வெளிநாடு யூரோ: US $ 5.00

# இறந்த விசுவாசிகளின் நினைவு தினம்

## (நவம்பர் 02)

திருத்தந்தை 23ம் அருளப்பர் குறிப்பிடுவதுபோல் இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு, நிலையான மறையுண்மைகளைப் பற்றிச் சிந்திக்க வைக்கிறது. மறைந்துவிடக் கூடியன எவை என்றும், நிலை பெற்றிருக்கக் கூடியன எவை என்றும், நம்மைச் சீர்தூக்கிப் பார்க்க வைக்கிறது. கி.பி. 3வது நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, தெர்தெலியன் கூறியதுபோல், ஒருவர் இறந்த நாளன்றும், அதன் பிறகு ஆண்டு நிறைவு நாளன்றும், அவருக்காகத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. கி.பி. 7ஆவது நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில், இறந்த விசுவாசிகளின் நினைவு தூய ஆவியாரின் திருநாளுக்கு மறுநாள் கொண்டாடப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. அது கி.பி. 11ஆம் நூற்றாண்டில் நவம்பர் 2ம் நாளாக மாறியது. குளூனியைச் சேர்ந்த மடாதிபர் புனித ஒடில்லோவின் கருத்துப்படி குளூனி துறவற சபையின் எல்லா மடங்களிலும், அனைத்துப் புனிதர்களின் விழாவுக்கு அடுத்த நாளில் இறந்த விசுவாசிகளின் நினைவு கூறப்படுகின்றனர்.

புனித பெர்நார்து தனது சகோதரர் சற்றயீரஸ் இறந்த சமயம் நிகழ்த்திய மறையுரையிலிருந்து : சாவு ஆதாயம். வாழ்வு ஓர் தண்டனை. புனித பவுல் அடிகளார் கூறவில்லையா. " எனக்கு வாழ்வு என்பது கிறிஸ்து, சாவு ஆதாயம்." கிறிஸ்து எனக்கு ஆதாயம் எனக்கு ஆதாயம் என்பது எதைக் குறிக்கிறது? உடலின் சாவையும் அருள்வாழ்வையும் அல்லவா? எனவே அவருடன் இறந்து அவருடன் அருள்வாழ்வு வாழ அழைப்புப் பெற்றுள்ளோம். இதற்காக நாம் தினமும் மரிப்பதற்குக் கற்றுக்கொள்வது அவசியம். இதன் மூலம் கீழ்த்தரமான உடல் இச்சைகளை வெட்டியெறிய முடியும். விண்ணகத்தின் உச்சியிலிருந்து படைப்பை உற்றுநோக்குவதன் மூலம், அவற்றின் கவர்ச்சியை நாம் வெகு தொலைவில் போட்டு ஒதுக்கி விடுகின்றோம். இவ்வாறு தான் நாம் மரண இருளிலிருந்தும் அதன் தண்டனையிலிருந்தும் தப்பித்துக்கொள்ள இயலும். உடல் இச்சையின் போராட்டத்தை நம் உள்மனதில் உணருகிறோம். இதற்கு என்ன மாற்று மருந்து? இத்தகைய சாவினின்று என்னை மீட்கவல்லவர் யார்? இறையேசுவின் மூலம் இறையருளால் மீட்புப் பெறுவோம்.

எனவே சாவு கிறிஸ்துவின் அருங்கொடை ஓர் அற்புதமான மருந்து. உடலின் சாவு என்பது மனித இயல்பு. இதன் பொருட்டு நமது உடலின் இச்சைகளிலிருந்து நம்மை அகதிகளாக்கிக் கொள்ளவேண்டும். அப்போது கிறிஸ்துவினின்று பிரிந்து அகதிகளாக மாட்டோம். உடலின் இச்சைகளுக்கு நம்பிக்கையளிக்காமல் இயற்கையின் பசிக்கு அவசியமான உணவு அளித்தாலும், அருள்வாழ்வைப் பெரிதெனப் பேணி வாழவேண்டும்.

கிறிஸ்து விரும்பியிராவிடில் அவர் இறந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தனது கேவலமான சாவை புறக்கணிக்க அவர் விரும்பவில்லை. நம்மை மீட்பதற்கு [illegible] தவிர வேறு வழியைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை. ஆதலின் அவரின் சாவு ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வாக அமைந்துள்ளது. அவரின் சாவினால் நாம் முத்திரையிடப் பெற்றிருக்கின்றோம். அவரது சாவை திருப்பலி வேளையில் அறிக்கையிடுகின்றோம். அவரது சாவு நமது வெற்றிவாகை, அருட்சாதனம். ஆண்டுதோறும் உலகின் மாபெரும் விழா அவரது சாவை நினைவு கூர்தல் இவ்வாறு அவரது சாவு நமது சாவை மீட்டுவிட்டது. இதனால் நாம் சாவைக்குறித்து துயர் அடையலாமா? மனுமகன் சாவினின்று ஓடவில்லை. நாம் சாவுக்குப் பயந்து பறந்துவிடலாமா? மனுமகன் பறந்துவிடவில்லையே.

உண்மையாகவே இறைவன் படைப்பின் தொடக்கத்தில் சாவை உண்டுபண்ண வில்லை. ஆனால் என்றைக்கு அருவருப்புக்குரிய பாவம் மனிதனில் புகுந்து அதன்பொருட்டு, கண்ணீரும், இரத்த வியர்வையும் அவனுடன் ஒட்டிக்கொண்டதோ அன்றுதான் சாவை ஓர் மாற்று மருந்தாகத் தோற்றுவித்தார். இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் ஆசபாசங்களுக்கு ஓர் முற்றுப்புள்ளி தேவை. இவ்வாறுதான் மன்னன் தாவீது பாடி இருக்கிறார். "ஆண்டவரிடம் நாம் கேட்டவரம் ஒன்று. எனது வாழ்நாளெல்லாம் அவரது இல்லத்தில் இடம்பெற்று வாழவேண்டும். அங்கு எனது ஆண்டவரின் அழகு சோபனத்தைக் கண்டுகளிக்க வேண்டும்.

நன்றி புனிதர்களின் சுவடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரது துன்பத்தை அன்புடன் துடைக்காவிடில் வேறு எதற்காக வாழ்கின்றாய்?

# இளையோர் பாதை

## புனித யாக்கோபுடன் இணைவோம். (யாக். 1:19-21)

பிள்ளைகளே, ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும், பேசுவதில் சினம் கொள்வதிலும் தாமதம் காட்ட வேண்டும் ஏனெனில் மனிதரின் சினம் கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் நிறைவேறத் தடையாயிருக்கின்றது, எனவே எல்லாவகையான அழுக்கையும் உங்களிடம் மிகுந்துள்ள தீமையையும் அகற்றி, உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பட்ட வார்த்தையைப் பணிவோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதுவே உங்களை மீட்கவல்லது.

ஆம் பிள்ளைகளே, நீங்கள் எப்பொழுதும் அறிவுக்குரியவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சியுங்கள். பேசுவதிலும் சினம் கொள்வதிலும் தாமதம் உள்ளவர்களாக இருங்கள். கோபம் கொள்ளாதீர்கள். ஏனெனில் கோபம் அன்புறவைப் பிரித்து பிளவுபடுத்திவிடும். நற்செயல்களில் இறைவன் இருக்கின்றார். இறைச்செயல்களுக்கு, கோபச்செயல்கள் முட்டுக்கட்டையாகிவிடும் ஆகவே பொறுமையும், அமைதியான பிள்ளைகளாக வாழுங்கள். உங்களைப் பார்த்து சினம் கொள்ளும் சிறுவர்களைப் பார்த்து புன்முறுவல் செய்து வாழுங்கள். நீ பெரியவனாய் இருக்குமளவுக்கு பணிந்துநட. அப்போது ஆண்டவர் முன்னிலையில் உனக்குப் பரிவு கிட்டும். சீ.ஞா. 3:18

அருட்சகோ ஞா.மரியநாதன். பு.பி.ம.ச.

## புனிதர் அனைவரையும் பூவுலகிலே போற்றிடுவோம் (01/11)

*"இந்தத் திருநாளால் என்ன பயன்? பூவுலகில் புனிதர் அனைவருக்கும் வணக்கம் காட்டுகிறோம். எதற்காக? அவர்களை இறைவன் பெருமையில் உயர்த்திவிட்டாரே! நாம் தரும் வணக்கம் அவர்களுக்குத் தேவையில்லை நாம் எழுப்பும் புகழ்பாக்களும் தேவையற்றவை. அவர்களை நினைவுகூரும்போது பயன் பெற வேண்டியவர்கள் நாம்தாம். அவர்களை நினைத்தாலே, அவர்களிடம் சென்றும் என்றும் நான் அவர்களுடன் உறவுகொள்ள விரும்புகிறேன் என்று அறுதியிட்டுக் கூறுவேன். அவர்களுடன் நாம் தோழமை கொண்டாட வேண்டும். வாழ்வோர் நாட்டிலுள்ள புனிதர்களுடன் தோழமை கொள்ளும் தகுதி பெறவேண்டும் என்பது நமது முதல் குறிக்கோளாய் இருக்கட்டும். சகோதரர்களே, நமது அக்கறையின்மையை விட்டொழிப்போம். மறுவுலகில் உள்ளவற்றைப் பற்றியே சிந்தனையாய் இருப்பதற்காகக் கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுவோம். அவர்களின் மகிழ்ச்சியில் நாமும் பங்கடைய வேண்டும். மேலும் புனிதர்களின் பரிந்துரையை நாம் மேலான முறையில் விரும்ப வேண்டும். ஏனெனில் நாம் நமது மன்றாட்டினால் பெறமுடியாத நன்மைகளை அவர்களின் மன்றாட்டின் பயனாகப் பெறலாம்.*

*நாம் ஒவ்வொருவரும் புனிதராக வாழவேண்டும் என்பதே நமக்கு இறைவன் விடுத்துள்ள அழைப்பு. இந்த அழைப்புக்கு ஏற்றவாறு வாழ்ந்திட, அவரே சிறப்பான அருளை நம்மீது பொழிந்திட வேண்டுவோம்.*
*நன்றி புனிதரின் சுவடுகள்.*

## நூல் அறிமுகம் நம்மவர் படைப்பு.....




நூலின் பெயர்: புரட்சியின் சுவடுகள்
ஆசிரியர்: அருட்தந்தை பெனி யே.ச
விலை: 102.50
கிடைக்கும் இடம்: 30, புகையிரத வீதி, ஹட்டன்.

நூலைப்பற்றி
இக்காலத்தின் தேவைக்கேற்ப குருத்துவம், துறவறம், இல்லறம், திருச்சபை என்பனபற்றி புதிய சிந்தனையுடன் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை மக்கள் வரவேற்கும் வண்ணம் அவர்களைத் தயார்படுத்துவது பணியாளர்களின் கடமையாகும். இத் தேவையை இக்கைநூல் நிறைவு செய்கிறது. சாதாரண வாசகர்களுக்காக அவர்களின் சிந்தனைகளை மேலும் சற்று கூர்மைப்படுத்த எழுதப்பட்டது. வாசக நெஞ்சங்களே வாங்கிப்படியுங்கள் வாழ்க்கையின் மாற்றத்தை உணருங்கள் படித்துவிட்டு எழுதியவருக்கு உங்கள் கருத்துக்களை வரையுங்கள்.

## இலட்சியத்தில் இடறமாட்டாய்

நண்பனே!
ஜொலியாக வாழ்வதில் தப்பில்லை
பின் நாளில் வலியாகாமல்
பார்த்துக்கொள்.
அழகும், பணமும் சந்தோஷமா?
இளமை தான் என்ன நிரந்தரமா?
இறந்திட்ட பின்பு பிறந்திட முடியாது,
காலம் கடந்திட்ட பின்பு,
அதற்குள் மீண்டும் நுழைந்திட
முடியாது, அன்பு மட்டுமே அழியாதது.
உன்காலம் முடிந்த பின்னும்
அதுதான் நிலையானது.
பிறந்தோம் இறந்தோம் என்றில்லாமல்,
நல் மதிப்பை நிலைத்திடச் செய்,
ஒரு கணம் உன்னைப் பற்றி யோசி,
நல்லதையே மனதில் நினைத்துக்கொள்.
மற்றவையெல்லாம் ஈஸி,
இதயம் எல்லோருக்கும் உண்டு
அதை அடகு வைத்துவிடாதே!
நேரம் மட்டுமே உனக்குச் சொந்தம்.
அதில் நேர்மைதான் நேர்வழிப் பாதை
துணிந்து செல்..... தொடர்ந்து செல்!
இலட்சியத்தில் இடறமாட்டாய்.

ச. ஜோன்சன்
குருக்கள் மடம்.



மழையில்லாமல் ஊர் முழுவதும் வறண்டுபோய் விட்டது. மக்கள் அசையாத நம்பிக்கையுடன் (மாற் 11:23) உருக்கத்துடனும், மழைக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்க வந்திருந்தனர்:

பிரசங்கம் செய்ய வந்திருந்த குரு, இதனை நன்கு அறிவார். "மக்களே! நீங்கள் எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கையோடு மழைக்காகச் செபிக்க வந்துள்ளீர்கள் என்பதை நான் அறிவேன்" (சுற்றிப் பார்த்துவிட்டு, தாழ்ந்த குரலில்) ஆனால் யாருமே குடைகொண்டு வர வில்லையே.....! என்றார்.

## பாதைப் பத்திரிகையின் பாராட்டுப் பெறுபவர்



2006ஆம் ஆண்டை தேசிய சிறுவர் ஆண்டாகக் கொண்டு நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக்களத்தின் மூலம் தீவடங்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் தமிழ் மொழி மூல கனிஷ்ட பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற எஸ் டொரின் கிறிஸ்டா. மா/பாக்கியம் தேசியக் கல்லூரி

## மலையகமே விழித்தெழு!

இம் மண்ணிற்கு புகழ் சேர்க்க
இருளொழிந்து எழுவாய்
மலையகமே!
இன்றோடு நீ படும்
இம்சைகள் ஒழிய வேண்டும்!

அரசியல் வாதிகளின்
அசட்டைத்தனத்தை அடக்கி!
நீதிக்கு ஆதரவாய்
நீ விழித்தெழுவாய் மலையகமே!

மாணவர்களை ஊக்கப்படுத்தி
மண்ணிற்கு புகழ் சேர்க்க!
மதுவை ஒழித்து சுகம் காண
விழித்தெழுவாய் மலையகமே!

வாக்குரிமையை நம்பி
வாழ்ந்த காலம் போதும்!
உன் வல்லமையைக் காட்டிட
விழித்தெழுவாய் மலையகமே!

சாதி மத பேதமின்றி
சாதனைகள் புரிந்திட!
ஒற்றுமை ஒளியோடு
ஓங்கி எழுவாய் மலையகமே!

விண்ணோடு புகழ் உயர
வீண் விடயங்களை ஒதுக்கி!
வீர நடை போட்டு
விழித்தெழு மலையகமே!

தூங்கிய காலம் போதும் - எம்
துன்பக் கேணி விலக
துயர் துடைத்து எழுவாய்!
துரிதமாய் விழித்தெழுவாய்
மலையகமே!

வறுமை நீங்கிட - எம்
வாழ்க்கை தரம் உயர்ந்திட
வாட்டங்கள் மறைந்திட
வானம் போற்றிட விழித்தெழுவாய்
மலையகமே! வளங்கள் சேர்த்து
வாழ்வளிப்பாய் மானிடர்க்கு
வல்லமை காட்டிட வான தேவனும்
போற்றிட விழித்தெழு மலையகமே!

ஜே. நவநீலன்
புனித பிரான்சிஸ்கன் சிறுவர் இல்லம்
மாத்தளை.

## புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வும் வழிகாட்டலும்.....

*கவிதைப்போட்டி முதலாம் இடம்*

அன்பு நகராம் அசிசின் நகரின்
அரும் பெரும் செல்வமாம் பிரான்சிஸ்கு.
பின்னிப் பிணைந்த தீய உலகினை
திருத்த வந்த திருமகனின் தூதராம்.
தூய உலகை அமைத்திடவே
துஷ்ட பாவம் போக்கிடவே
திருச்சபையை புனரமைக்க,
திண்ணமாய் வழிநடத்த,
திருமகன் அருளிய பிரான்சிஸ்கு
மொறாக்கோ, சீனா, யப்பான்
முழுவதுமே பரப்ப நற்செய்தி
முன்வந்து ஒப்படைத்து தன்னையே
உலக செல்வம் உதாசித்து
உண்மையாய் இறைவனை இஷ்டப்படுத்தி
அற்புதம் அருளி தீர்க்கதரிசனம் செய்த
பிரான்சிஸ் அசிசியாரே வரவேண்டும்
மீண்டும் நீர்

ஜெசைபா ரொவின்வன்
பொகவந்தலாவ



நாவற்காட்டு பங்கில் 'பாதை' பத்திரிகை குழுவினரால் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான எழுத்தாற்றல் பயிற்சி பாசறையில், பங்குத்தந்தையையும், பாதை ஆசிரியர் குழுவினரையும் மற்றும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## சிறுவர் தினச் சுற்றுலா

2006 ஒக்டோபர் 01ம் திகதி உலக சிறுவர் தினமாகும். அது சிறுவர்களாகிய எங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாளாகும். அன்றைய தினம் எங்கள் பிரான்சிஸ் சிறுவர் இல்லத்திலிருந்து நாங்கள் ஓர் சுற்றுலாவிற்காகக் காலை 6.45 மணியளவில் கண்டி நோக்கி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஒரு பஸ் வண்டியில் பயணமானோம். மாத்தளையிலிருந்து கண்டிவரை நாங்கள் பஸ் வண்டியில் ஆடிப்பாடி ஆனந்தமாகப் பயணித்தோம்.

காலை 9.30 மணியளவில் கண்டியைப் போய்ச் சேர்ந்த நாங்கள் கண்டி போகம்பற மைதானத்தை அடைந்து அன்றைய தினம் சிறுவர் தினத்திற்காகப் பொலிசாரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தோம். அவற்றில் சிறந்த நிகழ்ச்சிகளாக எங்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டியவை, பொலிசாரால் பயிற்றப்பட்ட பொலிஸ் நாய்களின் செயல் திறமைகளாகும். அவற்றின் விளையாட்டுக்கள் ஆய்வுத் திறமைகள் எங்களுக்கும் உற்சாகம் ஊட்டுவதாக இருந்தது.

போகம்பற மைதானத்தில் நிகழ்ச்சிகள் 2.30 மணியளவில் தேசிய கீதத்துடன் முடிவடைந்தது. நாங்கள் அவ்விடமிருந்து புறப்பட்டுப் பிரசித்தி பெற்ற கண்டி பேராதனியப் பூங்காவைச் சுற்றிப்பார்க்கச் சென்றோம். சிறுவர்தின சுற்றுலாவில் யாவும் மகிழ்ச்சிதரும் அம்சங்களே அமைந்திருந்தன. பிற்பகல் 4.00 மணியளவில் தேனீர், சிற்றுண்டிகள் அருந்திவிட்டு எமது மாத்தளை இல்லத்தை நோக்கி வந்தோம். எமது நாள் இன்றும் என்றும் மகிழ்ச்சிக்குரியதாக அமைய, அதற்கான செயற்திட்டங்களை அமைத்துத்தரும் பெரியவர்களுக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பது சிறுவர் எமது கடமையாகும்.

S. புஸ்பாகரன்
தரம்-10, மாத்தளை *P.T.T.V.*

## மனிதன் மனிதனாய் வாழ 21 விஷயங்கள்

| | |
|---|---|
| மிக மதிக்கப்பட வேண்டியவர்கள் | - தாய், தந்தை |
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிக வேண்டியது | - பணிவு |
| மிக வேண்டாதது | - வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - நம்பிக்கை |
| மிகப்பெரிய நோய் | - பேராசை |
| மிக சுலபமானது | - குற்றம் காணல் |
| கீழ்தரமான விஷயம் | - பொறாமை |
| நம்பக் கூடாதது | - வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிகப் பேச்சு |
| செய்யக் கூடாதது | - நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக் கூடியது | - உதவி |
| விலக்க வேண்டியது | - சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | - வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | - நட்பு |
| இழக்க வேண்டியது | - கோபம் |
| இழக்கக் கூடாதது | - பொறுமை |
| மறக்கக் கூடாதது | - நன்றி |
| மறக்க வேண்டியது | - துரோகம். |

ருபிகா
நல்லாயன் மாணவியர் இல்லம்
மாத்தளை.


பாசச்சோலை
சிறுவர் இல்லம்
கோப்பாய்



சிறுவர்களே!
உங்கள் சித்திர திறன்களை நத்தார், புத்தாண்டு வாழ்த்து மடலாக வரைந்து அனுப்புங்கள். அடுத்த பாதையில் சிறந்தவர்களுக்கு பரிசும் பாராட்டும் வழங்கி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

சிறுவர்களே உங்கள் நண்பருக்கு சமாதானம் பகிரும் கடிதங்கள் எழுதி அனுப்புங்கள் தரமான கடிதங்கள் சிறுவர் பாதையில் பிரசுரமாகும்.

-ஆர்-



ஏ. வின்சன் - அசிசி இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பாதை

## பகுதி I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

(01) உலகம் முடியும் வரை நான் உங்களோடு இருப்பேன் என்று கூறிய இயேசு எப்பொழுதும் எம்மோடு கூடவே இருப்பதனால்,
1) நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.
2) திருச்சபையை யாராலும் அழிக்க முடியாமலிருக்கிறது.
3) திருச்சபை சவால்களுக்கு முகம் கொடுக்கிறது.
4) திருச்சபை பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

(02) இறைவனுக்குரிய மகத்தான இடத்தை உலக செல்வங்களுக்குக் கொடுப்பவன்,
1) புத்திசாலி 2) பலசாலி
3) மடையன் 4) பெருச்சாளி

(03) இறை அரசை மனித உள்ளங்களில் நிறுவுவதற்காக இயேசு,
1) ஒரு கட்டிடத்தை உருவாக்கினார்.
2) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார்.
3) மக்களைத் தேடிச் சென்றார்.
4) சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

(04) ஓநாய்களுக்கு மத்தியில் ஆட்டுக்குட்டியை அனுப்புவது போல் நான் உங்களை அனுப்புகிறேன் என்று இயேசு கூறியது.
1) ஓநாய்கள் ஆட்டுக் குட்டியை கொன்று விடுவதனால்.
2) ஆட்டுக்குட்டிகள் மிகவும் சாதுவானவையானபடியால்.
3) மறைபணியாற்றச் செல்வோர் பலவிதமான சவால்களுக்கு முகம் 'கொடுக்க வேண்டும் என்பதால்
4) நாட்டிலே ஓநாய்களைப் போன்ற மனிதர்கள் இருப்பதனால்

(05) தலைமைக் குருவான இயேசு தம்மைத் தாழ்த்தித் தலைமைத்துவப் பண்பை எமக்குப் புகட்டிய ஒரு சம்பவம்,
1) பெரிய வியாழன் இராப்போசன வேளையில் சீடர்களின் பாதங்களைக் கழுவியது.
2) சிலுவையில் இடதுபக்கக் கள்வனைச் சபித்தது
3) பாவிப் பெண்ணுக்கு மன்னிப்பளித்தது
4) தம்மைக் கல்லாலெறிந்து கொல்ல வந்தவர்கள் மத்தியிலிருந்த மறைந்து போனது.

(06) கிறிஸ்து தமது பணியை உலக முடிவுவரை செயற்படுத்துவதற்கு ஒப்படைத்திருப்பது,
1) பரிசுத்த பாப்பரசரிடம் 2) திருச்சபைத் தலைவர்களிடம்.
3) பொதுநிலையினரிடம். 4) பரிசுத்த திருச்சபையிடம்.

(07) கத்தோலிக்க திருச்சபை திருயாத்திரை செய்கிறது. இந்தத் திருயாத்திரை இறை அரசு முழுமையாக வெளிப்படும் பொழுது முடிவடைகிறது என்று கூறப்பட்டிருப்பது,
1) திருவிவிலியத்தில்.
2) திருவெளிப்பாட்டில்.
3) இன்றைய உலகில் திருச்சபை என்னும் வத்திக்கான் சங்க ஏட்டில்.
4) புனித பவுலின் திருமுகத்தில்.

(08) உண்மையான சகோதரத்துவம் என்ன என்பதை எடுத்துரைக்க இயேசு கூறிய ஓர் உவமை,
1) நல்ல சமாரியன். 2) இரவில் அப்பம் கேட்ட நண்பன்.
3) பொற்காசுகள். 4) திராட்சைத் தோட்ட வேலையாட்கள்.

(09) கஷ்டப்பட்டு உழைக்காமல் நேரத்தை வீண் விரயம் செய்பவர்களுக்குப் புனித பவுலின் சொற்படி,
1) ஊதியம் கொடுக்கக் கூடாது.
2) உணவு கொடுக்கக் கூடாது.
3) அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும்.
4) சிறையில் அடைக்க வேண்டும்.

(10) பத்துக் கன்னியரின் உவமையின் மூலம் இயேசு நமக்குக் கற்பிப்பது.
1) விளக்கிற்கு எண்ணெய் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது.
2) பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது.
3) மரணத்திற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது.
4) மணவாளனை எதிர்கொண்டு அழைத்து வரவேண்டும் என்பது.

(11) உலக திருச்சபையில் மிகச் சிறிய ஒன்றியம்,
1) பங்கு 2) மறைக்கோட்டம்
3) மறைமாவட்டம் 4) கிறிஸ்தவ ஒன்றியம்

(12) உலகைப் படைத்த இறைவன் அது நல்லதெனக் கண்டார் என்பதன் பொருள்,
1) அது நன்மைத்தனத்தின் ஊற்றாகிய இறைவனால் படைக்கப்பட்டது.
2) அது இறை ஆசீரைப் பெற்று அவர் விருப்பப்படியே உருவானது
3) இறைவன் தந்த இந்த உலகம் விலைமதிப்பற்றது.
4) இறைவன் படைத்த இந்த உலகம் மிகவும் அழகானது

(13) புனிதத்துவத்தை அடைவதற்கு நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் சமமான வாய்ப்புக் கிடைக்கிறது என்பதை எடுத்துக் காட்டக் கிறிஸ்துநாதர் கூறிய உவமை,
1) விதைப்பவன் உவமை.
2) புதையலும் முத்துக்களும் பற்றிய உவமை.
3) நல்ல விதைகளும் களையும் பற்றிய உவமை.
4) கடுகு விதையின் உவமை.

(14) திருச்சபையில் செயலாற்றுகின்ற கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வை உறுதிப்படுத்துவது
1) திருச்சபையின் பணிகள்.
2) பொதுசனத் தொடர்பு சாதனங்கள்
3) செபமும் தியானமும்.
4) கிறிஸ்தவ அன்பும் மன்னிப்பும்

(15) தலைமைக் குருவான இயேசு தமது தலைமைத்துவ நிலையிலிருந்து தம்மைத் தாழ்த்தி முன்மாதிரியைக் காட்டியது,
1) தமது சீடர்களின் பாதங்களைக் கழுவிய செயலின் மூலம்.
2) அப்பத்தைப் பிட்டுத் தமது சீடர்களுக்குக் கொடுத்ததன் மூலம்.
3) சிலுவையைச் சுமந்துகொண்டு கல்வாரி மலைக்குச் சென்றதன் மூலம்
4) பாவியான சக்கேயுவின் வீட்டில் விருந்துண்டதன் மூலம்.

16) அசுத்த ஆவி உங்களுக்குப் பணிகிறது என்று நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டாம் என்று இயேசு கூறியது.
1) தமது சீடர்கள் புதுமைகள் செய்யும்போது.
2) அநேகமான பேய்கள் பிடித்திருந்த ஒரு சிறுவனைக் குணமாக்கியபோது.
3) பிசாசை விரட்ட அதிகாரம் கொடுத்த போது.
4) சீடர்கள் தமது சேவையில் அதிக ஆர்வம் காட்டாதபோது.

(17) இயேசுவின் திருமுழுக்குச் சம்பவத்தோடு தொடர்புடைய மூன்று உருவங்கள்
1) நெருப்பு, குரலொலி, காற்று
2) வானம், காற்று, நெருப்பு
3) தண்ணீர், வானம், புறா
4) வானம், புறா, குரலொலி

(18) இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளுவதில்லை என இயேசு கூறியது,
1) கப்பர்நகூம் ஊரில் 2) நசரேத் தொழுகைக் கூடத்தில்
3) கலிலேயாவில் 4) ஜெருசலேமில்

(19) தமக்குச் செவிமடுத்த மக்களுக்கு அறிவுரை வழங்க இயேசு பயன்படுத்திய வழிகள்
1) சட்டதிட்டங்கள், போதனைகள்.
2) பத்துக் கற்பனைகள், போதனைகள்.
3) வாழ்க்கையோடும் சூழலோடும் தொடர்புடைய நிகழ்ச்சிகள்.
4) இயற்கைச் சூழல், போதனைகள்.

(20) "................................ உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் ஆண்டவருக்கு முன் செல்வார்." இவ்விடைவெளிக்குப் பொருத்தமான சொல்,
1) மோசேயின். 2) எலியாவின்.
3) பேதுருவின். 4) யாக்கோபின்.

21) "குழந்தாய் நீ உன்னத ................................ இறைவாக்கினன் எனப்படுவாய்." இவ்விடைவெளிக்குப் பொருத்தமான சொல்
1) பீடத்தின் 2) மாட்சிமையின்
3) கடவுளின் 4) அன்பின்

(22) தாயின் வயிற்றில் இருக்கும் பொழுதே பரிசுத்த ஆவியினால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டவர்
1) எலியா. 2) சக்கரியாஸ்.
3) பவுல். 4) திருமுழுக்கு யோவான்.

(23) "உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்." என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
1) இயேசு பரிசேயருக்கு.
2) திருமுழுக்கு யோவான் வரிதண்டுவோருக்கு
3) மோசே பொதுமக்களுக்கு.
4) புனித பேதுரு வரித்தண்டுவோருக்கு

(24) "இறை அரசிற்காக உழையுங்கள். உங்கள் சொந்த இலாபம் கருதி ஒருபோதும் இறை அரசின் மதிப்பீடுகளை அசட்டை செய்யாதீர்கள்." என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
1) இயேசு சீடர்களுக்கு.
2) திருமுழுக்கு யோவான், பொதுமக்களுக்கு.
3) திருமுழுக்கு யோவான் சபைத் தலைவர்களுக்கு.
4) இயேசு தலைமைக் குருக்களுக்கு.

25) "நான் எனது தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று இயேசு தமது பெற்றோரிடம் கேட்டது,
1) தமது எதிர்கால பணி தொடர்பாக.
2) தாம் ஆலயத்தில் இருக்கவேண்டியவர் என்பதனால்.
3) அவருடைய அலுவல் ஆரம்பமாகிறது என்பது.
4) தாம் யார் என்பதை அறிவிப்பதற்கு.

(26) யோவானின் திருமுழுக்கின் வழியாக வெளிப்படுத்தப்படுவது.
1) மக்கள் புதியதொரு மறையைப் பின்பற்றுகிறார்கள் என்பது.
2) மக்களை மனம் மாறச் செய்வது இறைவன் திட்டம் என்பது.
3) பிழைகளை ஏற்றுக்கொண்டு மனம் திரும்புதல்.
4) யோவானிடத்தில் மக்கள் கொண்டுள்ள விசுவாசம்.

27) பத்துக் கற்பனையுடன் தொடர்புடைய சட்டதிட்டங்களைக் கொண்ட திருச்சட்டத்தைப் பூரணப்படுத்தி கிறிஸ்து நாதர் கூறியது.
1) எல்லாம் நிறைவேறிவிட்டது சென்று வாருங்கள்
2) என் தந்தை ஒன்றாக இணைத்தவர்களை மனிதர்கள் பிரிக்காதிருக்கட்டும் என்பது.
3) நான் உங்களை அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்.
4) மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ நீங்கள் அதைச் செய்யுங்கள்

28) யாயீரின் மகளை உயிர்ப்பித்த இயேசு அந்தப் புதுமையின் மூலம்
1) தம்முடைய வல்லமையைக் காட்டினார்.
2) அவர் இறைமகன் என்பதை வெளிப்படுத்தினார்.
3) மக்கள் மத்தியில் பிரசித்தப்படுத்தப்பட்டார்.
4) யாயீரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்.

(29) இலாசரின் சகோதரி மரியாள் தேர்ந்து கொண்ட நல்ல பங்கு,
1) தம்முடைய பெற்றோரின் சொத்தில் சரிபாதி.
2) இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல்.
3) வீட்டு வேலைகளைத் திறம்படச் செய்தல்.
4) நாள் தவறாமல் ஆலயம் செல்லுதல்.

(30) என் அன்பார்ந்த மகன் நீரே. உம் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் என்று இறைத்தந்தை வெளிப்படுத்தியது.
1) இயேசு திருமுழுக்குப் பெற்றபொழுது.
2) இயேசு வனாந்தரத்திலே நாற்பது நாட்கள் நோன்பிருந்தபோது.
3) இயேசு தேவாலயத்தில் போதித்துக் கொண்டிருக்கும்போது.
4) இயேசு சிலுவை மரத்தில் உயிர்விடும் பொழுது.

(31) இறை அரசு பரப்புவதற்குப் பல தடைகள் உள்ளன. ஆயினும் இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதனால் இறைஅரசிற்கு உரிமையாளராக முடியும் என்பதை இயேசு விளக்குவது.
1) கடுகு விதை பற்றிய உவமையின் மூலம்.
2) விதை விதைப்பவன் பற்றிய உவமையின் மூலம்.
3) புளிப்பு மா உவமையின் மூலம்.
4) நல்ல சமாரியன் பற்றிய உவமையின் மூலம்.

(32) "உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதியாதிருப்பாயாக" என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது.
1) ஏரோது, தலைமைக் குருவிற்கு.
2) பரிசேயர், மறைநூல் அறிஞர்களுக்கு.
3) சதுசேயர் மறைநூல் அறிஞர்களுக்கு.
4) இயேசு சாத்தானுக்கு.

(33) ஓய்வு நாளில் நோயாளரைக் குணமாக்கியதன் மூலம் இயேசு நமக்குக் கற்பிப்பது
1) நோயாளர்கள் மட்டில் நாம் இரக்கமுடையவர்களாக இருக்கவேண்டும் என்பது.
2) அர்த்தமற்ற சமுதாய பழக்க வழக்கங்களை விட்டுவிட வேண்டும் என்பது.
3) நாம் எப்போதும் உண்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது.
4) ஓய்வு நாளில் நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்பது.

(34) பாலைவனத்தில் நாற்பது நாட்கள் நோன்பிருந்த இயேசு கலிலேயாவிற்கு வந்த பின் அவர் மக்களை நோக்கிக் கூறியதாவது.
1) "விண்ணிலும் மண்ணிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது."
2) "காலம் நிறைவேறிவிட்டது இறை ஆட்சி நெருங்கி விட்டது"
3) "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள்."
4) "இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்"

(35) இயேசுவின் தூதுரைப் பணியின் உச்ச நிலையாக இருந்தது.
1) அவரது போதனைகளும், புதுமைகளும்
2) அவரது பாடுகள். மரணம், உயிர்ப்பு
3) அவரது போதனையும். மரணமும்
4) அவரது உயிர்ப்பும் விண்ணேற்றமும்

(36) இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றி புனித லூக்கா நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பது.
1) "பாலனோ வளர்ந்து வலிமை பெற்றார். ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார்"
2) இதோ உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்
3) இக்குழந்தை எத்தகையவனாவானோ?
4) உண்மையில் ஆண்டவருடைய அருட்கரம் அவரோடு இருந்தது

(37) நீர் கடவுளுடைய மகன் என்றால் ................................
1) ஏன் தச்சனின் மகனாகப் பிறந்தீர்?
2) உமக்கு அரசனாக வரமுடியும் அல்லவா?
3) இந்தக் கற்களை அப்பமாக மாற்றும்
4) இறை அரசை எங்களுக்குக் காட்டும்

(38) இறை பணியாற்றச் செல்வோர் கைத்தடியையோ பையோ எடுத்துச் செல்ல வேண்டாம் என்று இயேசு கூறியது.
1) பயணத்திற்கு அவை இடைஞ்சலாக இருக்குமாதலால்.
2) இறைவன் அவர்களுக்குப் பக்க பலமாக இருப்பதனால்.
3) வெறும் கையோடு செல்வது இலகுவாக இருக்கும் என்பதனால்.
4) அவை பிரச்சனைகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்குமாதலால்.

(39) கஷ்டங்களுக்கு மத்தியிலும் இறை அரசைத் தேடுபவர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள்
1) இப்பொழுது அழுகிறவர்கள்
2) பாவம் செய்யாதவர்கள்
3) கஷ்ட துன்பங்களை ஏற்றுக்கொள்பவர்கள்
4) நல்லவர்கள்

(40) இறைவனின் பிள்ளையாக இருக்கவேண்டும் என்றால்
1) நன்மையை நாடுங்கள்
2) தீயோருக்கும் கருணை காட்டுங்கள்
3) வலியோரை வாழ்த்துங்கள்
4) எளியோரைத் தூற்றுங்கள்

## பகுதி II

**நீர் விரும்பும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

(01) i) கிறிஸ்தவப் பண்பாடுகள் நமக்கு எதற்கு வழி காட்டுகிறது?
ii) கிறிஸ்தவப் பண்பாடுகள் எவை?
iii) கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ அழைக்கப்பட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? ஆறு விடைகள் எழுதுக.

(02) i) கிறிஸ்தவ ஒன்றியத்தின் உறுதியான நிலைப்பாட்டிற்குக் காரணமாகவுள்ள வழிமுறைகள் மூன்றை எழுதுக.
ii) திருச்சபையின் உறுதிப்பாடு ஆண்டவரில் முன் செல்லும்போது முகம் கொடுக்க நேரிடும் சவால்கள் மூன்றை எழுதுக.
iii) பரிசுத்த திருச்சபையைப் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதுக.

(03) i) இயேசு எடுத்துக்காட்டிய உண்மையான நன்மைத்தனங்கள் எவை?
ii) உண்மையான நட்பு, சகோதரத்துவம் பற்றி எடுத்துரைக்க இயேசு கூறிய உவமைகள் எவை?
iii) அவற்றுள் ஒரு உவமையை விபரித்தெழுதுக.

(04) i) புனித லூக்கா யார்?
ii) புனித லூக்கா நற்செய்தியை எழுதியதன் நோக்கம் என்ன?
iii) புனித லூக்கா நற்செய்தியைக் குறிப்பிடும் பெயர்களை எழுதுக.

(05) i) திருமுழுக்கு யோவான் யார்?
ii) திருமுழுக்கு யோவானின் பணி என்ன?
iii) திருமுழுக்கு யோவானின் போதனையைக் கேட்க வந்தவர்கள் யார்? அவர்களுள் யாராவது ஒரு சாரார் கேட்ட வினா என்ன? அதற்கு அவர் கொடுத்த பதில் என்ன?

(06) i) மெசியா இவ்வுலகிற்கு எவ்வாறு வந்தார்?
ii) குழந்தை இயேசு எவ்வாறு வளர்ந்தார் என்று புனித லூக்கா கூறுகின்றார்?
iii) இயேசுவிற்கு 12 வயது நடக்கிறபோது என்ன நடந்தது என்பதை விபரமாக எழுதுக.

(07) இயேசு நாற்பது நாட்கள் நோன்பு இருந்த பின் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த சோதனைகளையும் அதை அவர் எவ்வாறு வெற்றி கொண்டார் என்பதையும் எழுதுக.

(08) i) இயேசு தமது சீடர்களுக்குக் கொடுத்த அதிகாரங்கள் எவை?
ii) இயேசு அன்று சீடர்களுக்குக் கொடுத்த அந்த அதிகாரங்களை இன்று உமக்குத் தந்துள்ளார். ஆகவே அதன்படி அந்த அதிகாரங்களை நீர் எவ்வாறு செயற்படுத்துவீர்?

விடைகள் பக்கம் - 06

"இறைவா உன் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும்" என்ற புனித அசிசியின் புனித வாக்கிற்கேற்ப இன்றைய கால கட்டத்தில் எமது இலங்கை திருநாட்டிற்கு மட்டுமன்றி உலகில் அனைத்து இடங்களிலும் "சமாதானம்" என்ற சொல் பேசப்படுகிறது. சமாதானம் முதலில் நாட்டில் மலர்வதை விட எம் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் மலர வேண்டும். அப்போதுதான் நாட்டிலும் உலகிலும் நாம் ஏங்கித்தவிக்கும் சமாதானம் கிட்டும்.

இயற்கை எழில் நிறைந்த இத்தாலி தேசத்திலே அசிசி என்ற அழகிய நகரிலே வணிகராக பீட்டர் பெர்னார்டோன் என்பவருக்கும், பீக்கா என்ற பெண்மணிக்கும் 1181-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் சிறுவயதினிலே இவ்வுலக நாட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி சினிமா துறையில் ஈடுபட்டு வாழ்ந்தார். இவரின் இவ்வாழ்க்கையை கண்ட இவரின் தாயார் மனக்கவலையுற்று குருவிடம் சென்று முறையிட்டாள். அக்குருவானவர் அச்சிறுவனுக்கு புத்தகம் ஒன்றை கொடுத்தார். "இழந்து பெற்ற இளைஞன்" என்ற புத்தகம் இவரை மாற்றியமைத்தது. "ஆண்டவரே எனக்குள்ள எல்லாவற்றையும் ஏன் இந்த உடையை கூட அவரதுதான் என்று சொல்வார். இதனையும் கழற்றி அவரிடம் கொடுத்து விடுகின்றேன்" என்று கூறி உடையை வீசினார். இதனை கண்ட ஆயர் இவருக்கு ஒரு துணியை கொடுத்தார்.

இவரின் 20வது வயதில் நடந்த போரில் அசிசியர்கள் தோல்வியுற இவர் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அங்கே நம்பிக்கை அற்று இருந்த சகாக்களிடம் "நான் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஆச்சரியப்படாதீர்கள். ஒரு நாள் வரும். அன்று நான் அகில உலகத்தாலும் போற்றப்படுவேன்" என கூறினார். சிறையில் இருந்து விடுதலை பெற்று வர நோய் இவரை விட்டு வைக்கவில்லை. அதனால் இவர் உற்சாகம் இழந்தார். இதனால் வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டுமென தீர்மானித்தார். பின் வாரங்கள் உருண்டோடின. மீண்டும் பழைய கேளிக்கைகளில் ஈடுபட்டார். வீரசாகசத்திற்கு மற்றுமொரு வாய்ப்பு கிட்டவே அப்புலியா என்ற இடத்திற்குச் சென்றார். ஸ்பொலெடா இடத்தில் நோய்வாய்பட்டார். அவ்வேளை இதயக்கதவு தட்டப்பட்டது. "இளைஞனே இறையன்பா? இவ்வுலகக் கவர்ச்சியா? எதற்கு செவிமடுக்கப்போகிறாய் செல்வந்தனா? ஏழையா? தலைவனா? பணியாளனா?

### புனித பிரான்சிஸ் அசீசியார் "வாழ்வும் வழிகாட்டும்"

*கட்டுரைப்போட்டி முதலாம் இடம்*

யார் உன் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் எனக்குரல் ஒலியை கேட்ட பிரான்சிஸ் "நீர் கூறுவது உண்மை ஆண்டவரே! நான் என் செய்யவேண்டும்" என்றார்.

"அசிசிக்கு செல் நீ செய்யவேண்டியது அங்கே உனக்கு சொல்லப்படும்". பிரான்சிஸ் அங்கிருந்து புறப்படும் போது அவரின் சகாக்கள் பழித்தனர். அதற்கு பிரான்சிஸ் "உலகில் எவருக்கும் நிகரில்லாத அழகியை மணமுடிக்க திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறேன்" எனக் கூறினார். இவர் பயணம் செய்தபோது தொழுநோயாளியைக் கண்டு பயந்து சென்றார். மனதில் அமைதி இன்றி மீண்டும் வந்து அந்நோயாளியை அரவணைத்து முத்தம் இட்டார். வேறொரு நாள் பிச்சைக்கார கூட்டத்தைக் கண்டு தன் உடைகளை பிச்சைக்காரனிடம் கொடுத்து தானும் பிச்சை கேட்டார்.

ஏழைகளுக்கு உதவியதோடு ஜெபதப வாழ்வில் தன்னை அர்ப்பணித்தார். இவர் பொருளுதவியன்றி உள்ளத்தில் உலுக்கலுடன் இருந்தபோது "பிரான்சிஸ் போய் என் இல்லத்தை செப்பனிடு. அது பாழடைந்துள்ளது" என்ற குரல் கேட்டது. வீதிகளில் சென்று ஆலயம் கட்ட ஒரு கல் வழங்குமாறு கூறினார். பின்னர் மக்களின் உதவியுடன் ஆலயப்பணி பூர்த்தியாகியது. தனக்கு வந்த இடர்களின் மத்தியிலும் சலனமற்ற நிலையுடன் செயற்பட்டார். உலக படைப்பு ஒவ்வொன்றிலும் இறை அன்பின் பிரதிபலிப்பை உணர்ந்தார். இயற்கையை அதிகமாக நேசித்தார். இவ்வுலக மாயைகள் அனைத்தையும் வெறுத்து இறைவனின் அழைப்பை ஏற்று இறைபணி ஆற்றினார். இவ்வுலக இன்பங்கள் நிலையற்றது, நிரந்தரமற்றது என்று இறுதிவரை இறைபணி ஆற்றினார். இவர் 1224ம் ஆண்டில் திருச்சிலுவை திருவிழா அன்று தனது உடம்பிலே இயேசுவின் திருக்காயங்கள் பதியப் பெற்றார். வேதனை சொல்லுந்தரமல்ல. அமைதியான மனத்துடன் ஏற்று "ஆன்மாக்களின் புனித நிலைக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்" என்றார். தம் நேரம் வருவதை அறிந்த பிரான்சிஸ் போர்ரியுங்குலா மடத்திற்கு எடுத்து செல்லவேண்டினார். அங்கு 1226 அக்டோபர் 3ம் நாள் சிலுவையை உற்று நோக்கி உயிர் நீத்தார்.

இவரின் வாழ்வு மிகப்பணக்கார குடும்பத்தில் பிறந்தவர். சொந்தங்களையும், சொத்துக்களையும் விட்டு வாழ்ந்தார். இக்காலகட்டத்திலே புனிதரின் வாழ்வு எம் ஒவ்வொருவருக்கும் ஓர் எடுத்துக்காட்டானதாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறது. பகையோடும், மனிதரை மனிதர் கொலை செய்து, பணம், பொருளுக்காக அடுத்தவரின் வாழ்வை நாசப்படுத்தி ஏமாற்றி எல்லாம் தனக்கு என்ற பேராசையும் ஆணவமும், அகங்காரமும் கொண்டு வாழ்பவர்களுக்கு இவரின் வாழ்வு எடுத்துக்காட்டாக அமைகின்றது. மேலும் இவ்வுலகில் அநேகர் உலகமாயைகளில் மூழ்கி வாழ்கின்றனர். ஒருவர் மற்றையவரிடம் அன்பு இன்றி ஒருவரை மற்றையவர் ஒடுக்கி அடிமைப்படுத்தி பெயருக்காகவும், புகழுக்காகவும் வாழ்கின்றனர். எனவே புனித பிரான்சிஸ் அசிசியாரின் சமாதான வேண்டுதலுக்கேற்ப பகை உள்ள இடங்களில் அன்பையும் இருள் நிறைந்த இவ்வேளையில் ஒளியையும், ஆறுதல் கொடுப்பவனாகவும், மற்றையவரை புரிந்து ஏற்று பிறருக்கு கொடுப்பதன் மூலம் நிறைவையும், மன்னிப்பதனால் மன்னிப்பையும் பெறவேண்டி அவரின் அடிச்சுவட்டை பின்பற்றி வாழ்வோம்.

*மார்த்தாள் வேதநாயகம்,*
*புனித செபஸ்தியார் ஆலயம், கந்தானை, நமுனுகுல*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ச்சி.... கண்டவை, கேட்டவை, உணர்பவை

இப்பிரதிநிதிக்குழுவிற்கு யாழ் மறைமாவட்ட குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகளையும் சந்திக்க வாய்ப்புக் கிடைத்திருந்தது. அவர்களின் உணர்வுகளும் எண்ணக்கிடக்கைகளும் மன்னார் மறைமாவட்டத்தின் சகோதரர்களின் எண்ணக்கிடக்கைகள்போல் இருந்தன. நாவந்துறை, காக்கைத் தீவு வாழ் மக்களின் நிலையைப் பற்றி அறிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இராணுவப்படையுடனோ, புலிப்படையுடனோ கதைப்பது ஆபத்துக்குரியது என தம் வேதனைகளையும் அச்சத்தையும் பகிர்ந்தனர். யாரேனும் ஒரு குழுவுடன் கதைப்பது மற்றைய குழுவிற்கு எதிராகச் செய்யும் குற்றமாக கருதப்படுகின்றது. இதனால் இருசாரராலும் தண்டனைக்குள்ளாவது பொது மக்கள்தான் என்று தம் அவல நிலையை எடுத்துக் கூறினர். பெரும்பாலும் இளம் வயதுவந்த பெண்களுக்கே பாதிப்பு ஏற்படுவதாகவும் குறிப்பிட்டனர். மீனவர்களுக்கு மீன்பிடிக்க தடை செய்யப்பட்டுள்ளதால். தங்களது நாளாந்த தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இம்மக்கள் தவிக்கின்றனர்.

அச்சுவேலியில். மாணவர்கள் குறைந்தளவில் வருகை தந்திருந்த பாடசாலைக்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. இக்கிராமத்தில் வாழும் ஆண்கள் இராணுவத்தினதும் விடுதலைப்புலிகளினதும் ஆக்கிரமிப்புக்குப் பயந்து வன்னியை நோக்கிப் பாதுகாப்புத் தேடிச் செல்கிறார்கள். இராணுவத்தினரால் சுற்றிவளைத்துச் செய்யப்படும் விசாரணைகளின்போது பெருமளவில் பெண்களே பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறார்கள் எனத் தெரிவித்தனர்.

பிரதிநிதிக்குழு இறுதியாக, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலாளரான திரு. புலித்தேவனை சந்தித்தனர். அவருடன் உரையாடும்போது சமஷ்டியாட்சி முறைமூலமே இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென அவரது கருத்தை வெளியிட்டார். தங்களுடைய தலைவரின் வலியுறுத்தலின் படி பொதுமக்களைத் தாக்குவது தங்களது குறிக்கோளல்ல என உறுதியாகக் கூறினார். அரசு வேறு இராணுவக்குழுக்களைக் கொண்டு செய்யும் கொலைகளை முழுமையாக எதிர்ப்பதாகவும், ஒஸ்லோ ஒப்பந்தத்திற்கு சார்பாக அரசு செயற்பட வேண்டுமென்றும் யுத்த நிறுத்தத்தின்போது ஏற்பட்ட விளைவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதிலும் எவ்வித முக்கியத்துவம் இல்லையெனவும் வலியுறுத்தினார்.

கெபித்திகொல்லாவையில் பாதிக்கப்பட்ட மக்கள், அகதிமுகாம்களின் கூடாரங்கள் அமைத்து வாழ்வதைக் கண்டோம். அவர்களுடன் உரையாடியபோது, அரசாங்கத்தினாலும், பிறராலும் பெறப்பட்டுள்ள உதவிகளுக்கு நன்றி கூறினர். ஆயினும் கொதிக்கும் வெயிலும் கூடாரங்களில் வாழ்வதும் பிள்ளைகள் அடிக்கடி நோய்களுக்கு ஆளாவதும் கல்விக்கும் வாழ்க்கை நிலைக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்பவற்றையும் மனவேதனையுடன் பகிர்ந்துகொண்டனர். தாங்கள் நன்றாகவே அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் சிக்கித் தவிக்கிறார்கள் என்பதே இவர்களின் உணர்வு. இது இன்னொரு சோகக்கதை.

முடிவாக யாழ் நகர் மக்களும், மன்னார் மக்களும் தாங்கள் யுத்தத்தினால் பெரிதளவில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை எச்சந்தேகமுமின்றி ஏற்றுக்கொள்கிறோம். யார் எந்தநேரத்தில் கொலை செய்யப்படுவார், கைதுசெய்யப்படுவார் என்ற அங்கலாய்ப்பு நிலையில் இம்மக்கள் வாழ்வதும், தங்களுடைய வாழ்விற்கோ, உற்றார் உறவினரின் வாழ்விற்கோ உத்தரவாதமுள்ளோர் யாருமில்லை என்பதை கடுமையாக உணர்ந்துள்ளனர். அதிகரித்துவரும் இராணுவப்படையினரின் எண்ணிக்கையால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது எனவே இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் நன்று எனத் தெரிவித்தனர். அனைத்து தமிழ் மக்களையும் புலிகளாகக் கருதுவதினால் நீண்டகால துன்பத்திற்கு இம்மக்கள் ஆளாகியுள்ளனர் என்பதே அவர்களின் உணர்வு தங்களை இரண்டாம் தர பிரஜையாக கருதுவது மனவேதனைக்குரியதொன்றாகும். தமிழன் என்ற ஒரே காரணத்தினால் இவ்வாறு நடாத்தப்படுவதை முற்றாக எதிர்க்கின்றார்கள். ஏனெனில் அதற்கு அவர்கள் பொறுப்பல்ல எனக் கூறினார்கள்.

யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் கெபித்திகொல்லாவவிலும் மனித உரிமைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனக் கூறினால் அது மிகையாகாது. இது நாம் நேரடியாகக் கண்டுணர்ந்தது. பி.ப. 6 மணிக்குப்பின் மன்னாரில் மனித நடமாட்டத்தைக் காணமுடியாது மன்னாரில் யார் யாருக்குப் பொறுப்பு என்ற கேள்வி எம் மனங்களில் எழுகின்றது. நாட்டின் அபிவிருத்தியைப் பொறுத்தமட்டில் அரசிற்குப் பெரியதொரு பங்குண்டு. இவ் அபிவிருத்தியினால், அனைத்து மக்களும் சாதாரண வாழ்வை வாழவும். நீதி அனைவருக்கும் சமமானது என்பதை நிலைநாட்டவும் கூடியதாகவும் இருக்கும்.

துன்புறுகின்ற மக்களது தேவைகளுக்கு எந்நேரமும் ஆயத்த நிலையில் உள்ள எமது யாழ் மன்னார் ஆயர்களினால் வழி நடத்தப்படுகின்ற அம்மறைமாவட்டக் குருக்கள் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் பொதுநிலையினர் ஆகியோரினது சேவை பாராட்டுக்குரியது.

வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் தொடர்புகொள்ளக் கூடிய தன்மை அகன்று காணப்படுகின்றது என நாம் அறிகிறோம் இந்நிலையானது செய்தி பரிமாறலில் மூலம் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம். வடக்கில் நடைபெறும் சில சம்பவங்கள் தெற்கில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளில் வெளி வருவதில்லை என்பதும், வெளிவருகின்ற செய்திகள் பக்கச் சார்பானதாகவும் வதந்தியாகவும் அமைந்துள்ளது என்பதையும் நாம் காண்கிறோம். இது அதிருப்தியூட்டும் செயலாக அமைகின்றது. எனவே தொடர்பூடகங்களிற்குப் பொறுப்பானோர் உண்மையை அறிய மனிதனுக்கு உரிமை உண்டு. அவ்வுரிமையை வளப்படுத்துமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

மனித உயிர்களுக்கு மதிப்பளித்து, அப்பாவி மக்களை பழிவாங்குவதைக் குறிக்கோளாக கொள்ளாது செயற்பட, அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எமது கோரிக்கையை விடுக்கின்றோம். மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு கேட்கின்றோம்.

மக்களின் உள்ளங்களிலிருந்து சமாதான உணர்வு மறைவதற்குமுன் இலங்கை கத்தோலிக்கச் சபை ஏனைய மத சபைகளுடன் இணைந்து உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகிர்ந்து, சமாதானத்தை நிலைநாட்ட காலம் அண்மித்துள்ளது என்பதை பெரிதளவில் உணர்கிறோம். நாம் மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புவது பகை பகையை உண்டாக்கும். யுத்தம் பிரச்சினைக்குத் தீர்வல்ல.

அருட்சகோதரர் மைக்கல் டி வாஸ்
தலைவர் - துறவற சபை
தலைவர்களின் சங்கம்

**The Conference of Major Religious Superiors of Sri Lanka (CMRS)**

### இதய அஞ்சலி



அருட் சகோ. மார்க் அவர்களின் அன்புத் தந்தை 19.09.2006 இவ்வுலகை விட்டு இறைபாதம் நாடினார். அருட்சகோதரர் குடும்பத்தாரின் துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம். இவரின் ஆன்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்தித்து எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

புனித பிரான்சிஸ்கன் சபை
சகோதரர்களும் பாதை நிர்வாக
உறுப்பினர்களும்.

## அர்ப்பணத்திற்கு அர்த்தமூட்டி வெள்ளி விழா காணும் அருட்தந்தை வின்சன்பற்றிக் அ.ம.தி. அடிகள்

அர்ப்பண வாழ்வில் ஈர்ப்பத்தைந்தாண்டைக் காணும்
அருட்தந்தை வின்சன் பற்றிக் அ.ம.தி.அடிகள்
அர்ப்பணத்திற்கு அர்த்தமூட்டிய வாழ்வை
அருளிய அருட்கொடைக்காக ஆண்டவனுக்கு நன்றி சொல்வோம்.

வழிபாடும் வாழ்வும் என்று முடங்கி விடாமல்
வழிகாட்டும் பணிகளால் பலர் வாழ்விற்கு ஒளியூட்டி
"வாழவோம் வாழவைப்போம்" என எல்லைகள் கடந்த பணியில்
நற்செய்தியை நடைமுறை வாழ்வில் செயற்படுத்தும் தூதரானார்.

அல்லலுற்ற சிறுவர்களுக்கு புது வாழ்வூட்டும் அன்பக ஸ்தாபகராய்
போதையில் சிக்கியோர்க்கு மறுவாழ்வூட்டும் புதிய உதயமாய்
சர்வமத பேதம் கடந்து ஒன்றிணைக்கும் அன்பு மயமாய்
உடலுள்ள தாக்கம் போக்க உளவியல் உலகில் தடம் பதித்த
"நான்" சஞ்சிகை ஸ்தாபகராய்.

பொது நிலையினருக்கு பொறுப்புக்கள் பகிர்ந்து பணி செய்யத்தூண்டி
உருவாகி உருவாக்க பல பயிற்சிக் களங்கள் அமைத்து
பல்துறை வல்லோரை வெளிப்படுத்தி சரித்திரம் படைக்க வைத்து
படைப்பாற்றலால் பல நூல்கள் தந்து இலக்கிய உலகில் தடம் பதித்த
வெள்ளி விழா நாயகன் வி.ப ஒரு வித்தியாசமானவரே!

குருக்களின் உருவாக்கத்தில் நல்ல ஆசானாய்
இல்லற வாழ்வில் மக்களை ஒன்றிணைத்த அருட்பணியாளராய்,
யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளராய்
பல நூல்களின் படைப்பாற்றல் மிக்க சிறந்த எழுத்தாளராய்
பயிற்சிகளால் பல் துறையில் உருவாக்கும் நல்ல வளவியலாளராய்
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகராய்
மதுபோதைத் தவிர்ப்பு குழுக் குடும்பங்களின் புது வாழ்வூட்டும் வழிகாட்டியாய்

போரின் வடுக்களில் தவித்த சிறார்களுக்கு மறுவாழ்வூட்டும் அன்பகத் தலைவராய்
அ.ம.தி. குடும்பத்தின் ஆற்றல் துடிப்பு மிக்க அருட்பணியாளராய்
பணிகளால் அர்ப்பணத்திற்கு அர்த்த மூட்டி
"பணியாளர் பணிபெறவல்ல - பணி செய்யவே" என்ற இறை வார்த்தை மிளிர
ஈர்பத்தைந்தாண்டு ஆற்றிய பணிகளுக்காய் மன்னார் ஆயரும்,
அருளாளர்களும், சர்வமத மக்களும் மனதார வாழ்த்துகிறார்கள்.

விடத்தற் தீவு, பேசாலை பங்கு பணிவாழ்வின் நினைவுகளில்
உடக்குப் பாஸ் முதல், உயர்ந்து நிற்கும் பேசாலை வெற்றி நாயகி ஆலயமும்
பக்தி நூல்களுடன், இறைபுகழ் பாடல் ஒளி நாடாக்களும்
அயல் நாட்டுக் குருக்களின் இறைதியான வழிபாடுகளும
அன்பியமுடன் அறப்பணியில் இணைந்து பங்கு மக்களோடு
இன்னல்களிலும் இணைந்து நிற்க பங்களிப்பே சாட்சி சொல்லும்

வெள்ளி விழா நாயகரின் பணி வாழ்வு மேலோங்கி வளர்ந்திடவே
புதிய பணித்தளங்கள் இன்னும் பல காத்திருக்க
கல்வியிலும் பல்கலைக்கழக கலாநிதியாய் உயர்வு காண
கட்டிடங்கள் அல்ல மனித மனங்களைக் கட்டுவதற்காய்
படித்த உயர்கல்விப் பட்டங்களைப் பயன்படுத்த
இறை அன்பைப் பகிர்வதிலே இன்பம் காணும்
அறப்பணியாளர் அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகள் வாழ்வில்
அமலன் யேசு அருளாசி நிறைவாய்ப் பெற்று வாழ
இறையாசி வேண்டி வாழ்த்துகிறோம்.

*வெள்ளி விழா நாயகனே வாழ்க! வாழ்க! வாழ்க.*

ஆக்கம் : யோசப்பாலா
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்
யாழ்ப்பாணம்.

பாதை 14 இல் எமது வேண்டுதலை ஏற்று போட்டிக்கு ஆக்கங்கள் அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றோம். கவிதை, கட்டுரைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆக்கங்களை இங்கு பிரசுரிக்கிறோம். வெற்றியாளர்களுக்கான பரிசுகள் காலகிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

### விடைகள் பகுதி - 1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (01) | 2 | (11) | 1 | (21) | 3 | (31) | 2 |
| (02) | 3 | (12) | 2 | (22) | 4 | (32) | 4 |
| (03) | 2 | (13) | 3 | (23) | 2 | (33) | 4 |
| (04) | 3 | (14) | 4 | (24) | 3 | (34) | 2 |
| (05) | 1 | (15) | 1 | (25) | 1 | (35) | 2 |
| (06) | 4 | (16) | 1 | (26) | 3 | (36) | 1 |
| (07) | 3 | (17) | 4 | (27) | 3 | (37) | 3 |
| (08) | 1 | (18) | 2 | (28) | 2 | (38) | 2 |
| (09) | 2 | (19) | 3 | (29) | 2 | (39) | 1 |
| (10) | 3 | (20) | 2 | (30) | 1 | (40) | 2 |

(40 x 1 = 40 புள்ளிகள்)

### விடைகள் பகுதி *II*

(01) i) உண்மையும் வழியுமான கிறிஸ்துநாதரைப் போல் வாழவும், அவரைப் போல் சிந்திக்கவும் அவரைப் போல் பார்க்கவும் வழி காட்டுகிறது. ii) சகோதர அன்பைக் காட்டுதல் நீதியை நிலைநாட்டுதல் இறைவனின் விருப்பப்படி வாழுதல். iii) எமது விசுவாசத்தை அச்சமின்றி அறிக்கையிடுதல். சகோதர மனப்பான்மையுடன் பகிர்ந்து வாழுதல். ஆசைகளை அடக்கியாளுதல். வன்செயல்களை விலக்கிப் பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்துதல். சிந்தனை, சொல், செயல் யாவும் தூய்மையாயிருத்தல். இரக்கச் செயல்களில் ஈடுபடுதல். பகைவரை அன்பு செய்தல்

(02) i) திருமறையைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விபரித்துக் கூறுதல். இறை ஆராதனையை கருத்துள்ள முறையில் நடத்துதல். ஒரே விசுவாசத்திற்குச் சான்று பகருதல். ஒரே ஆண்டவரைப் பகிர்ந்து கொள்ளுதல் ii) மக்கள் தொடர்புச் சாதனங்களின் பிரயோகம், பிழையான கெட்ட நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், வியாபார விளம்பரங்கள், மனிதன் இறைவனை மிஞ்சிச் செல்ல முயற்சிக்கும் செயல்கள் இவை போன்றவை. iii) திருச்சபை மனிதர்களால் உருவாக்கப்பட்டது அல்ல, கிறிஸ்துநாதரால் ஏற்படுத்தப்பட்டது. அவரே அதன் காணப்படாத தலைவராக இருக்கிறார். மனித பலவீனங்கள் அதில் சில சமயங்களில் செயற்பட்டாலும் மனிதனுக்கு ஆறுதலையும் விடுதலையையும் பெற்றுத் தருகிறது. தூய ஆவியானவர் இதனை வழிநடத்துகிறார். இது வழுவான வரம் பெற்றிருப்பதால் தூய்மையான சபையாக இருக்கிறது.

(03) i) தர்மநெறியில் வாழுதல் நீதியை நிலைநாட்டுதல். இறைவன் முன் தூயவர்களாக நடத்தல். ii) நல்ல சமாரியன், செல்வந்தனும் இலாசரும். iii) இவை இரண்டில் ஒரு உவமையை விபரித்துச் சரியாக எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கப்படும்.

(04) i) சீரியாவில் அந்தியோக்கியா நகரில் ஒரு கிரேக்க குடும்பத்தில் பிறந்த கிரேக்க மொழியில் தேர்ச்சி பெற்ற கலைஞர் ஆவார். இவர் புகழ்வாய்ந்த வைத்தியரும் நற்செய்தியாளருமாவார். ii) இயேசு யூத மக்களுக்கு மட்டும் அல்ல, உலக மக்கள் அனைவரினதும் மீட்பராயுள்ளார் என்பதை வலியுறுத்தல். iii) ஏழைகளினதும் கைவிடப்பட்டோரினதும் நற்செய்தி. செபத்தின் நற்செய்தி, இரக்கத்தின் நற்செய்தி. பெண்களின் நற்செய்தி. தூய ஆவியின் நற்செய்தி. பிற இனத்தாரின் நற்செய்தி. இயேசுவின் பாலப்பருவ நற்செய்தி. புகழ் பாடும் நற்செய்தி

(05) i) தாயின் வயிற்றிலிருக்கும் போதே தூய ஆவியால் நிரப்பப்பெற்றவர் பழைய ஏற்பாட்டின் இறுதி இறைவாக்கினர். புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்கினர். சக்கரியாசுக்கும் எலிசபெத்தம்மாளுக்கும் பிள்ளையாகப் பிறந்தவர். மெசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்ய வந்தவர். ii) மெசியாவின் முன்னோடியாக இருந்து மக்களைத் தமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுத் திருமுழுக்குப் பெற அழைப்பு விடுத்தார். iii) பொதுமக்கள், வரி தண்டுவோர், படைவீரர், அரசியல் தலைவர்கள், சபைத் தலைவர்கள், அரசர்கள், சபைத் தலைவர்கள் பொதுமக்களுக்கு : குருவே நாங்கள் என்ன செய்ய வேண்டும் எனத் திருமுழுக்கு யோவானிடம் பொதுமக்கள் கேட்டபோது இறை அரசின் மதிப்பீடுகளைப் பின்பற்றி நாட்டில் காணப்படும் தீய சக்திகளால் கவரப்படாது கிறிஸ்துநாதரின் வாழ்க்கையைப் பின்பற்றி அவருக்கு ஏற்றவர்களாக வாழுங்கள்.

(06) i) நல்லதெனக் கணிக்கப்படாத பலம் குன்றிய இனமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊரில் ஒரு தச்சனின் மகனாக செம்மறியாட்டுப் பட்டியில் இடையர்கள் சாமக் காவல் காக்கும் காலத்தில் கடும் குளிரில் பிறந்தார். ii) ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வளர்ந்தார். iii) யூத சட்டத்தின்படி 12 வயதை அடைந்த ஒரு பிள்ளை விழாக்களின்போது கட்டாயமாகச் செல்ல வேண்டும், அதன்படி மரியாளும் சூசையும் இயேசுவை அழைத்துக்கொண்டு ஜெருசலேம் தேவாலயத்திற்குச் சென்றார்கள் (அதன்பின் நடந்த சம்பவங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கப்படும்)

(07) 1. கல்லை அப்பமாக்கும்படி கூறுதல் 2. தெண்டனிட்டு வணங்கும்படி கூறுதல் 3. தேவாலய உச்சியிலிருந்து கீழே குதிக்கும்படி கூறுதல். இவை ஒவ்வொன்றாக விபரமாக எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கப்படும்

(08) i) 1. நற்செய்தியைப் போதித்தல் 2. நோய்களைக் குணமாக்குதல் 3. பேய்களை ஓட்டுதல் ii) மாணவனின் விடைகளின் தன்மைக்கேற்ப புள்ளி வழங்கவும்

எதிர்வரும் "பாதை"
சிறப்பு மலரானது நத்தார்
புத்தாண்டை ஒட்டி
மலரவிருக்கின்றது.
இதற்காக உங்கள்
ஆக்கங்களை
**"மனித மனங்களில்
நம்பிக்கையின் ஒளி
பிறக்கட்டும்."**
என்ற தொனிப்பொருளில்
உங்கள் ஆக்கங்களை
வரைந்து 10.12.2006
இற்கு முன்னதாக
அனுப்பி வையுங்கள்.

### பாதை மடல்

பாதை ஆசிரியர்,
பாதை பேப்பர் சுமந்து வந்த அனைத்து செய்திகளும் சிறப்பாக இருந்தது. அதிலும் பாதையின் பார்வையில் என்ற பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. மேலும் பாதை பத்திரிகையில் இதுபோன்ற நல்வழி காட்டும் பகுதிகளையும் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன். பாதை வளர எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்

நு.ஆ. அர்ச்சனா
தரம் - 10, நாவற்காடு றோ.க.த.வி.

ஆசிரியர்,
எமது கத்தோலிக்க சமயத்தில் திருவிவிலியத்திலிருந்து வினாக்களை கேட்டு அதற்கான பதிலை அனுப்புமாறு வேண்டுதல். அதில் சரியான விடைகளை எழுதுவோருக்கு பரிசுகளை வழங்கல். எமது நாட்டில் இன, மத, குல வேறுபாடின்றி சமாதானமாக வாழ்வதற்கு நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யலாம் என எழுதுதல். போன்ற விடயங்களை உள்ளடக்கி கொள்வீர்களாயின் பாதையின் சிறப்பு மேலும் உயர்ந்து காணப்படும்.

டீ. லூட்ஸ் சசிரேக்கா, தரம் 11.

ஆசிரியர் அவர்களே,
1. இன்னும் பல பக்கங்கள் பாதைக்கு உள்ளடக்கலாம்.
2. நல்ல கருத்துள்ள சிறுகதைகள் தொடர் கதைகள் பிரசுரிக்கலாம்
3. போட்டிகள் நடத்தி பரிசுகள் பெறலாம்.
4. சித்திரங்களை வர்ணமாக்கி பிரசுரிக்கலாம்.

டீ. நிராஸ் றொஜீவா.

ஆசிரியர்,
இந்த பாதை பத்திரிகைகளில் இளைய தலைமுறையினருக்கு ஆன்மீக பலம் அவசியம் பற்றியும் அழைத்தல் ஒரு கொடை என்பது பற்றியும் போடப்பட்டுள்ளது அதுமட்டுமல்ல இன்னும் பற்பல விடயங்கள் இந்த பாதை பத்திரிகையில் போடப்பட்டுள்ளது.
எனக்கு இதில் பிடித்த செய்தி : பாதை மடல் ஆகும்.

J.N.D. வித்தியாசினி
நாவற்காடு, மாம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org